உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 சித்திரை 31 புதன்கிழமை (14-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:169

# வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப அதிகாரத்துடன் கூடியதான கட்டமைப்பு

## அரசுக்கு புலிகள் யோசனை

கிளிநொச்சி,மே14

**வடக்கு - கிழக்கை மீளக் கட்டியெழுப்புவதற்கும் வடக்கு - கிழக்கு மக்களுக்கு சகஜ வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவும் வசதியாக, நிர்வாக மற்றும் நிதி ரீதியாகப் போதிய அதிகாரம் கொண்ட கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும்.**

**விடுதலைப் புலிகள் இப்படியான யோசனை ஒன்றை முன்வைத்துள்ளனர்.**

வன்னிக்குக் கடந்தவாரம் வருகை தந்த ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி, நோர்வே தூதுவர், அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் மூலம் அரசுக்கு இந்த யோசனையை விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இந்த யோசனையை அவர்கள் அரசுத் தரப்பிடம் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் -

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வைத்தியசாலையில் முதல் 'சார்ஸ்' நோயாளி?

யாழ்ப்பாணம்,மே14

உலகைப் பரபரப்பிற்குள்ளாக்கி வரும் 'சார்ஸ்' நோய்க் குணங்குறிகளுடன் இளம் பெண் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றார். இவருக்கு அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டுவருகின்றது.

மூன்று நாள்கள் நீடித்த கடும் காய்ச்சலை அடுத்து நேற்றுமுன்தினம் இவர் யாழ்.ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார். இவரைப் பரிசோதனை செய்த மருத்துவர்கள் இனந்தெரியாத திடீர் சுவாசத் தொற்றுக்கு உள்ளாகி இருப்பதைக் கண்டறிந்துள்ளனர்.

முன்னேற்பாட்டு நடவடிக்கையாக நேற்று இந்த நோயாளி ஏனையோரின் தொடர்புகள் இன்றி தனிமைப்படுத்தப்பட்டார். அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இவரைப் பராமரித்துவரும் மருத்துவர்கள், தாதிகள் அனைவரும் 'சார்ஸ்' பாதுகாப்பு முகக்கவசம் அணிந்தவாறு காணப்பட்டனர்.

சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த இந்த யுவதியின் வீட்டுக்குக் கடந்த இருமாதங்களுக்கு முன்னர் கனடாவில் இருந்துவந்த உறவினர்கள் இவருடன் தங்கியிருந்துவிட்டு இரு வாரங்களுக்கு முன்னரே அவர்கள் நாடு

(13ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்துக்கு முகமூடிகள் விமானம் மூலம் நேற்று வந்தன

யாழ்ப்பாணம்,மே14

'சார்ஸ்' நோய் அறிகுறிகளுடன் நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டிருப்பதை அடுத்து இந்த நோயில் இருந்து தற்காப்புப் பெறுவதற்கான முகக் கவசங்களைப் பெற்றுக்கொள்ள யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் அவசர நடவடிக்கை எடுத்திருக்கிறது.

யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்து ஒரு தொகுதி முகக் கவசங்கள் நேற்று கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

நோய் அறிகுறி காணப்படும் நோயாளியைப் பராமரிப்பது, யாழ்.ஆஸ்பத்திரிக்கு உள்ளேயும் வெளியேயும் நோய் பரவாமல் இருக்க எடுக்கப்படவேண்டிய அவசர தடுப்பு நடவடிக்கைகள் என்பன பற்றி ஆஸ்பத்திரி நிர்வாகம் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. மருத்துவர்கள் கலந்துகொண்ட அவசர கூட்டம் ஒன்று நேற்றுப் பகல்

(13ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் ரெலோ உறுப்பினர் வீட்டருகே வைத்து சுட்டுக் கொலை

வவுனியா,மே14

ரெலோ அமைப்பின் மத்திய குழு உறுப்பினரான வேலாயுதம் சிவரமேஷ் (வயது 28) வவுனியா கற்குழிப்பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் அவர் தனது வீட்டுக்கு அருகே வாகனம் ஒன்றைக் கழுவிக் கொண்டிருந்தபோது, இனந்தெரியாத நபர்கள் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமராட்சியைச் சேர்ந்த அவர் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்து நீண்ட காலமாகப் பணி புரிந்தார். பின்னர் புலிகள் இயக்கத்தில் இருந்து விலகி, கடந்த 6 வருடங்களாக ரெலோ அமைப்பில் இணைந்து பணியாற்றிவந்தார்.

கொல்லப்பட்ட அவரின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது.

இக்கொலை தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் வவுனியாவில் இடம்பெற்ற முதலாவது கொலைச் சம்பவம் இதுவாகும். இவரின் இறுதிக் கிரியைகள் இன்று வவுனியாவில் இடம்பெறும்.

(ம-3-164)

## மக்கள் பீதியடைய வேண்டியதில்லை என வைத்தியசாலை பணிப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்ப்பாணத்தில் 'சார்ஸ்' நோய்க்கான முழுமையான ஆதாரம் எதுவும் இதுவரை கண்டறியப்படவில்லை. எனவே, மக்கள் தேவையின்றி பீதியடைய வேண்டியதில்லை.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சதுர்முகன்.

யாழ்போதனா வைத்தியசாலையில் 'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டவரென சந்தேகிக்கப்படும் ஒருவர், அனுமதிக்கப்பட்டுள்ளதான செய்தி தொடர்பாகக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்:-

'சார்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டவரெனச் சந்தேகிக்கப்படும் பிரஸ்தாப நபருக்கு 'சார்ஸ்' தொற்று ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படும் காலத்தில்

(13ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக பேராசிரியர் கருத்துரை இன்று

யாழ்ப்பாணம்,மே14

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள முழு நிலா நாள் கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சென்னை கிறிஸ்தவக்கல்லூரி தமிழ்த் துறைப் பேராசிரியரும் சொற்சிறப்பு ஆய்வாளருமான முனைவர் கு.அரசேந்திரன் 'என்றும் தமிழ்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார்.

(ம-3)

## ஜனாதிபதியின் எந்த விதச் சவாலையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார்!

### தேர்தல் நடந்தால் கூடுதல் பலத்துடன் மீண்டும் வெல்லுவோம் என பீரிஸ் சூளுரை

கொழும்பு,மே14

"ஜனாதிபதியால் விடுக்கப்படும் எந்தச் சவாலையும் சந்திக்க நாம் தயார். ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தால் பொதுத்தேர்தலுக்கு முகம் கொடுக்கவும் நாம் தயார். பொதுத் தேர்தலில் தற்போதைய நிலைமையைவிட கூடுதல் ஆசனங்களுடன் வெற்றியீட்டி மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம்".

- இவ்வாறு சூளுரைத்தார் அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-


நாட்டின் அபிவிருத்தியிலும் தேசிய நலனிலும் சிறிதும் அக்கறையற்றவராகவே ஜனாதிபதி நடந்துகொண்டுள்ளார்.

"அரசமைப்பின் 44 (1) பிரிவின்படி அவசியம் ஏற்படின் மட்டுமே பிரதமருடன் ஆலோசிக்க வேண்டும் எனவே, ஜனாதிபதி, பிரதமருடன் கலந்து பேசாமலேயே இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முடியும்" என்று எதிர்க்கட்சியினர் வியாக்கியானம் செய்கின்றனர். இது அவர்களுடைய அறியாமையைக் காட்டுகின்றது.

ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாகவும், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்ற அதிகாரமும் ஒரே கட்சியிடம் இருந்தால் இவர்கள் கூறுவது போல் கட்சியின் தலைவர் என்ற வகையில் முன்புபோல் தன்னிச்சையாகவும், சர்வாதிகாரமாகவும் ஜனாதிபதி முடிவெடுக்க முடியும்.

ஆனால், இன்றைய நிலை அப்படி அல்ல. நிறைவேற்று அதிகாரமும், நாடாளுமன்ற அதிகாரமும் இருவேறு கட்சிகளிடம் இருக்கின்றன. எனவே, அமைச்சரவை தொடர்பாக எந்த ஒரு தீர்மானத்தையும் எடுக்கும் முன் ஜனா

(13ஆம் பக்கம் பார்க்க)



இப்பொழுது தேசிய சேமிப்பு வங்கி 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த பிரஜைகளுக்கு...

நிலையான வைப்புகளுக்கு 1.5% மேலதிக மாதாந்த வட்டியை வருடாந்தம் வழங்குகின்றது.

இன்றே அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

தற்போது நடைமுறையிலுள்ள வட்டி வீதம் 9.7% வருடாந்த விளைவு வட்டி 10.1%

கௌரவ

மூத்த பிரஜைகளை கௌரவிக்கும் திட்டம்

NSB

உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

# இராணுவ ட்ரக் - மோ.சைக்கிள் விபத்தில் கான்ஸ்டபிள் உயிரிழப்பு!

## சாவகச்சேரியில் நேற்றுச் சம்பவம்

இராணுவ ட்ரக்கும் பொலீஸ் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் பொலீஸ் கான்ஸ்டபிள் உயிரிழந்தார். கண்டி வீதியில், சாவகச்சேரி பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று காலை 8.20 மணியளவில் இந்தக் கோரவிபத்து இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற மன்னாற்றுறை பொலீஸ நிலையத்தை சேர்ந்தவரான பி.ஏ.ரி. குலதுங்க (வயது 32) என்ற கான்ஸ்டபிளே உயிரிழந்தவராவார்.

பணி நிமித்தம் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்துக்குச் சென்ற சமயமே அவர் இந்த விபத்தில் சிககியதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் தலை, கால் மற்றும் கைப்பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட குலதுங்க, சுமார் இருமணி நேர தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டும் அது பயனளிக்காமல் உயிரிழந்தார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட சாவகச்சேரி பதில் நீதிவான் சு.கந்தசாமி இராணுவ ட்ரக்கை ஓட்டி வந்த சிப்பாயைக் கைதுசெய்து எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில வைக்குமாறு உத்தரவிட்டார்.

உயிரிழந்த பொலீஸ் கான்ஸ்டபிளின் சடலத்தை மரணவிசாரணை மற்றும் பிரேத பரிசோதனையின் பின்னர் அவரது உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்விபத்துச் சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ ட்ரக், சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ம-9-10-15-31-117-173)

# தற்போதைய அரசியல் நிலை குறித்து புலிகள் - கூட்டமைப்பு நேற்று பேச்சு

கிளிநொச்சி.மே14

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தியதை அடுத்து உருவாகியுள்ள அரசியல் நிலைமை குறித்து தமிழ்க் கூட்டமைபுக் குழுவினரும் விடுதலைப் புலிகளின் குழுவினரும் நேற்று கிளிநொசசியில் விரிவாக ஆராய்ந்தனர்.

கிளிநொச்சியில் உள்ள நடுவப் பணியகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இச்சந்திப்பு பிற்பகல் 2.30 வரை தொடர்ந்தது.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக், மட்டு - அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அமிர்தாப் ஆகியோர் விடுதலைப் புலிகளின் தரப்பில் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ஜோசப் பரராஜசிங்கம், இரா.சம்பந்தன், சிவசக்தி ஆனந்தன், எஸ்.துரைரட்ணசிங்கம், ஆர்.சந்திரநேரு, ஞா.கிருஷ்ணபிள்ளை, இராஜ குகனேஸ்வரன், தங்கவடிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.



நேற்றைய சந்திப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகமும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனும்...... (படம்:வசந்தன்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் செயலாளர் நாயகம் (சுரேஸ் அணி) சுரேஸ் பிரேமச்சந்திரனும் சந்திப்பில் கலந்து கொண்டார்.

இதேவேளை-

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி பேச்சில் கலந்துகொள்ளவில்லை. பேச்சுக்களில் கலந்துகொள்ளச் சென்ற ரெலோ எம்.பியான செல்வம் அடைக்கலநாதன் தமது உறுப்பினர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து உடனடியாக வவுனியா திரும்பினார்.

விடுதலைப் புலிகளினால் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களால் ஏற்பட்டுள்ள நிலை பற்றியும், இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு ஏற்ற வகையில் இராணுவ முகாம்கள் மாற்றியமைக்கப்படவேண்டியதன் அவசியம் பற்றியும் அவசர மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழு (சிரான்) செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு சகல தரப்பினரும் இணைந்த நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்குவது பற்றியும் விரிவாக ஆராயப்பட்டன.

(ம-5)

# அமெரிக்க உதவிச் செயலாளரின் கண்டிக்கான விஜயம் திடீர் ரத்து

கண்டி.மே14

அமெரிக்காவின் தெற்காசிய பிராந்தியத்துக்கான உதவிச் செயலாளர் திருமதி கிறிஸ்ரினா றொக்கா நேற்று கண்டிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. காலநிலை சீராக இல்லாததாலேயே இவரது விஜயம் இரத்துச் செய்யப்பட்டது என தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன தெரிவித்தார். தலதாமாளிகைக்கு இவர் விஜயம் செய்ய இருந்தார்.

மல்வத்தை பீடாதிபதியைச் சந்தித்து உரையாட அவர் அவகாசம் கோரியபோதிலும் வெசாக் கொண்டாட்டங்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள வேலைப்பளு காரணமாக அச்சந்திப்புக்கு பீடாதிபதி இணங்கவில்லை.


## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### முழு நிலா நாள் கருத்தரங்கு

காலம் : இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி

(முழுநிலா நாள் 15ஆம் திகதி என்றாலும் ஒரு நாள் முன்னதாக இந்நிகழ்வு நடத்தப்படுவதைக் கவனத்தில் கொள்க.)

இடம் : யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

தலைமை : திரு. க.சி.குகதாசன் (முன்னாள் அதிபர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி)

கருத்துரை : சொற்பிறப்பு ஆய்வாளர் முனைவர் கு.அரசேந்திரன் (தமிழ்த்துறைப் பேராசிரியர், சென்னை கிறிஸ்தவக் கல்லூரி)

தலைப்பு : "என்றும் தமிழ்"

அனைவரும் வருக!

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம். - செயலாளர்.

அனுசரணை: உதயன்


# அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ந்தும் மிலிந்த வசமே!

## அடித்துக் கூறுகின்றார் அமைச்சர் பீரிஸ்

கொழும்பு,மே14

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்ந்தும் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் வசமே இருக்கிறது. அதில் எந்த விதமான மாற்றமும் இல்லை.

கடந்த இரண்டு வருடத்திலேயே அபிவிருத்தி லொத்தர் சபை கூடுதலான வருமானத்தைப் பெற்றுள்ளது. அது அமைச்சர் மொறகொடவின் நிர்வாகத் திறமைக்கு ஒரு சான்று.

- அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் நிர்வாகம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை தெரிவிக்கும் வகையில் அமைச்சர் பீரிஸ் நேற்று விசேட செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற இச்செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் மேலும் கூறியதாவது:-

லொத்தர் சபை நிர்வாகம் தொடர்பாக அமைச்சர் மிலிந்த மொறகொட மீது எந்தவிதமான குறைபாடுகளையும் ஜனாதிபதியால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் அபிவிருத்தி லொதத்ர் சபை எனது நிர்வாகத்தின் கீழேயே இருக்கவேண்டும். அது தவறுதலாக உங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டது என்று ஜனாதிபதி தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இந்த தவறை கண்டுபிடிப்பதற்கு ஜனாதிபதிக்கு 17 மாதகாலம் பிடித்துள்ளது.

ஜனாதிபதி தன்னிச்சையாக ஒரு கடிதத்தை எழுதிவிட்டால் மட்டும் நிர்வாக மாற்றம் ஏற்பட்டுவிடாது.

ஜனாதிபதியே "இவ்விடயம் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும்" என அமைச்சர் மொறகொடவுக்கு எழுதிய உள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அதனால், அரச அச்சகருக்கு இரண்டு அறிவித்தல்கள் கிடைத்துள்ளன. அச்சிடும்படி ஜனாதிபதியும்,

(14ஆம் பக்கம் பார்க்க)


16ஆவது தடவையாக

பல்கலைக்கழக மாணவர்கள் ஆற்றுகை செய்யும்

யாழ்.பல்கலைக்கழகத்தில்.....

நாடகம்

அக்கினிப் பெருமூச்சு

இன்று அரங்கத்தில்

அப்பாவிக் கிராமம் பனியும் கூதலாய் படுத்திருந்த போது சிதைக்கப்பட்ட ஊர். அந்தக் கிராமத்தின் குழந்தைகளை பேய்கள் சப்பியதாக நட்சத்திரங்கள் சொல்லி, சொல்லி விழுந்தன. நிலவந்தக் கிராமத்தில் இருந்து உயிர்தப்பி வானத்தில் நின்றது.



எங்கள் அடிவயிற்றின் நெருப்பாக கனக்கின்ற உணர்வு இந் நாடகம்

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் மாலை 4.00 மணிக்கு

பிரவேசம்: 50/-, 30/-

எழுத்துரு, நெறியாள்கை: தே.தேவானந்த்

செயல்திறன் அரங்க இயக்கம்
ACTIVE THEATRE MOVEMENT

ஊடக அனுசரணை: உதயன்



சவூதியில் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்ற இடங்களில் கட்டடங்கள், வாகனங்கள் சிதைந்து கிடக்கும் காட்சி.

## அமெரிக்கர் உட்பட 10பேர் பலி! 50பேர் காயம்!! கட்டடங்கள் தகர்ந்தன!!!

# சவூதி அரேபியாவின் தலைநகரில் அடுத்தடுத்து குண்டுகள் வெடிப்பு!

## அல்கெய்டா கைவரிசை

றியாட்,மே14

**சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட்டில் உள்ள அமெரிக்க இராணுவ ஆலோசனை நிலையத்தை இலக்கு வைத்து நடத்தப்பட்ட பெரும் குண்டுத் தாக்குதல்களினால் பத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்திருக்கின்றனர். கட்டடங்கள் பல தகர்ந்துபோயின. ஐம்பதுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்திருக்கின்றனர்.**

றியாட் நகரில் அமெரிக்கர்கள் மற்றும் ஐரோப்பியர்களின் குடியிருப்புகள் அமைந்துள்ள பகுதியில் அடுத்தடுத்து நான்கு குண்டுகள் வெடித்திருக்கின்றன.

மூன்று இடங்களில் கார்களில் வைத்திருந்த வெடிகுண்டுகள் வெடித்தன. இச்சம்பவத்தில், 10பேர் உயிரிழந்தனர். இதில் இருவர் சவூதி, லெபனான் நாட்டைச் சேர்ந்தவர்கள். மற்றொருவர் எந்த நாட்டவர் என்ற விவரம் தெரியவில்லை. இறந்தவர்களின் எண்ணிக்கை இதைவிட அதிகம் என்று சுயாதீன செய்தி வட்டாரங்கள தெரிவித்தன. காயமடைந்தவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்கர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் கொலின் பவல் சவூதி வருவதற்கு திட்டமிட்டிருந்த நிலையில், இந்தக் குண்டுவெடிப்புகள் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த குண்டுவெடிப்பில் அல்கெய்டா தீவிரவாதிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

குண்டுவெடிப்பில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். இவர்கள் உடனடியாக றியாட்டில் உள்ள தேசிய இராணுவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது என்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் கூறுகிறது.

இச்சம்பவத்தில் குடியிருப்புப் பகுதி வளாகம், உணவு விடுதி மற்றும் ஒரு பொழுதுபோக்கு மையம் ஆகியவை சேதமடைந்துள்ளன. குண்டு வெடித்த இடங்களில் தீ ஏறபட்டது. சுமார் 12வீடுகளும் 16 கட்டடத் தொகுதிகளும் தகர்ந்து போயின.

அல்-ஹம்ராவில் உள்ள குடியிருப்புப் பகுதியில் கார் குண்டை வெடிக்கச் செய்யும் முன்னர் தீவிரவாதிகள் அங்கிருந்த பாதுகாப்பு வீரர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதாக அவாத் அல்-கஹ்டானி என்பவர் கூறியுள்ளார்.

வெனில் என்னும் அமெரிக்க ஆலோசனை நிறுவனம் இயங்கும் கட்டடத்திற்கும் தீவிரவாதிகள் குறிவைத்து கார் குண்டை வெடிக்கச் செய்துள்ளனர். இங்கு பணியாற்றும் ஊழியர்களின் இல்லங்கள் உள்ள பகுதியிலும் வெடிகுண்டுகள் வெடித்துள்ளன. இந்த நிறுவனம்தான் சவூதி தேசிய இராணுவ வீரர்களுக்கு ஆலோசனை வழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

குண்டுவெடிப்புச் சம்பவங்களைத தொடர்ந்து றியாட் நகரில் வசிக்கும் 40ஆயிரம் அமெரிக்கர்களும் வீட்டை விட்டு வெளியே வரவேண்டாம் என்று றியாட்டில் உள்ள அமெரிக்கத் தூதரகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

குண்டுவெடிப்பில் 10பேர் இறந்ததாகக் கூறப்பட்டாலும், இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாம் என்று அல்-அரேபியா தொலைக்காட்சி செய்தி வெளியட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் சவூதி வரத் திட்டமிட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் நடந்திருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)




## அமெரிக்கர்களைத் தாக்க சவூதி தீவிரவாதிகள் திட்டம்

டுபாய்,மே14

சவூதி அரேபியாவில் உள்ள அமெரிக்கர்களைத் தாக்குமாறு அங்குள்ள இஸ்லாமிய தீவிரவாதக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட்டில் கடந்த வாரம் இஸ்லாமியத தீவிரவாதிகளின் மறைவிடத்தை அமெரிக்க அதிகாரிகள் சோதனை செய்து அங்கிருந்து ஏராளமான ஆயுதங்களைப் பறிமுதல செய்தனர்.

இதற்கு பழிவாங்க, அமெரிக்கர்களை தாக்கப் போவதாக தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

இதையடுத்து, சவூதி அரேபியாவுக்கு அமெரிக்கர்கள் யாரும் அவசியமின்றிச் செல்லவேண்டாம் என்று அமெரிக்க அரசு கூறியுள்ளது. (ஐ)

## சீனாவில் நெடுஞ்சாலைக்கு அடியில் பழங்கால குகைகள், புத்தர் சிலைகள்

பெய்ஜிங்,மே14

சீனாவில் நெடுஞ்சாலைக்கு அடியில் பழங்கால குகைகளும் அழகிய புத்தர் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மத்திய சீனாவில் உள்ள ஹெனான மாகாணத்தில் நெடுஞ்சாலையைத் தொழிலாளர்கள் சீரமைத்துக்கொண்டு இருந்தபோது, அதற்குக் கீழே குகைகள் இருப்பதைக் கண்டுபிடித்தனர்.

அங்கு 10 புத்தர் சிலைகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

கி.பி.618 - 907ஆம் ஆண்டு காலத்தைச சேர்ந்த தாங்வம்ச ஆட்சியின் போது அவை கட்டப்பட்டு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இத்தகவலை அந்த மாகாண கலாசாரம், பண்பாட்டு பாதுகாப்புத்துறை தெரிவித்தது.

அதே பகுதியில் ஏற்கனவே ஏராளமான குகைகளும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட புத்தர் சிலைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

(ஐ)

## எல்லை தாண்டிய பயங்கரவாதம் நின்றால்தான் பாகிஸ்தானுடன் பேச்சு என்கின்றார் வாஜ்பாய்

இமாசலப்பிரதேசம்,மே14

எல்லைக்கு அப்பால் இருந்து இந்திய மண்ணில் தூண்டிவிடப்படும் பயங்கரவாதச் செயல்களுக்கு முடிவு கட்டப்படாத வரை இந்தியா-பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்க முடியாது என்று பிரதமர் வாஜ்பாய் திட்டவட்டமாகக் கூறினார்.

அத்தோடு, பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாதிகள் பயிற்சி முகாம்களையும் அவர்களது கட்டமைப்புக்களையும் ஒழிக்கவும் வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

6 நாள் ஓய்வுக்காக இமாசலப் பிரதேசத்தில் உள்ள மணாலி நகருக்கு செவ்வாய்க்கிழமை வந்து சேர்நத வாஜ்பாய் செய்தியாளர்களிடம் கூறியதாவது;-

நிபந்தனையற்ற பேச்சுக்களை தொடங்கவேண்டும் என்று பாகிஸ்தான் தலைவர்கள் கோருவதில் அர்த்தம் இல்லை. ஏனென்றால் பேச்சுக்கு முன் எல்லை தாண்டிய பயங்கரவாதத்திற்கு முடிவு கட்டவேண்டியது அவசியமாகும். பயங்கரவாதம் நிற்காமல் பேச்சுக்கு ஏற்ற சுமுகமான சூழ்நிலையை எப்படி உருவாக்க முடியும். எனவே, பேச்சு நடத்த நிபந்தனை எதையும் விதிக்கவில்லை. பேசுவதற்கு ஏற்ற சுமுகச் சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாகிஸ்தானுக்கு நட்புக்கரத்தை நீட்டியிருக்கிறது இந்தியா; அதற்கு அவர்களது பதில் எப்படி இருக்கிறது என்பதைப் பார்ப்போம்-என்றார் வாஜ்பாய்.

## சீனாவில் நிலச்சரிவு 15 பேர் பலி!

பெய்ஜிங்,மே14

தென்மேற்கு சீனாவில் ஞாயிறன்று ஏற்பட்ட நிலச்சரிவில் 15பேர் உயிரிழந்தனர்.

குயிடோவ் மாகாணப் பிரதேசம் மியோடாங் கிராமத்தில் சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது திடீரென்று நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் 35பேர் சிக்கினர். அவர்களில் 15 பேர் இறந்தனர்.

விபத்து நடந்த இடத்துக்கு உயர் அதிகாரிகள் விரைந்துள்ளனர். மண்ணிலும் இடிபாடுகளிலும் சிக்கியவர்களை மீட்கும் பணி விரைவாக நடைபெறுகிறது.

இச்செய்தியை 'சீனா டெய்லி' திங்களன்று வெளியிட்டுள்ளது. சம்பவம் குறித்து விசாரணை நடைபெறுகிறது. (ஐ)

## இந்தியா-பாக். பேச்சுக்கு அமெ.உதவுமாம்!

வாஷிங்ரன்,மே14

இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதிப் பேச்சு நடத்த உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் பில் ரீக்கர் இதைத் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை ஆகிய நாடுகளில் அமைதியைப் ஏற்படுத்த அந்நாடுகள் எடுக்கும் முயற்சிக்கு அமெரிக்கா உதவும். இந்நாடுகளில் அமெரிக்காவுக்கு நெருங்கிய நட்புறவு உள்ளது. - என்றும் அவர் கூறினார்.

## உயிரியல் ஆயுதம் தயாரிக்கும் ஈராக் வாகனம் கண்டுபிடிப்பு!

ஒமாஹா,மே14

ஈராக்கில் உயிரியல் இரசாயன ஆயுதங்களைத் தயாரிக்கும் பரிசோதனைக் கூடம் பொருத்தப்பட்ட மற்றொரு வாகனத்தைக் கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது. ஏற்கனவே இதுபோன்ற வாகனத்தைக் கண்டுபிடித்ததாக அமெரிக்கா அறிவித்தது. இப்போது இரண்டாவது வாகனமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் ஆரி பிளீசர் திங்கட்கிழமை இதைத் தெரிவித்தார். ஈராக்கில் சதாம் அரசு மறைத்து வைத்துள்ள பேரழிவு ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்களைக் கண்டுபிடித்துவிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

ஈர விழிகளுடன்

## ஆறாம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 14 - 12 - 1935



மறைவு 17 - 11 - 2002

சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த

### அமரர் சு.கந்தசாமி

(ஆசிரியர் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் உறுப்பினர், நகரசபை, சாவகச்சேரி)

'மாதங்கள் ஆறு ஆயினும் ஆறவில்லை எம்துயரம்
எத்தனை உறவுகள் எமக்கிருப்பினும் நித்தமும்
ஐயா! என்றழைக்க இந்த உலகில் நீங்களில்லையே!
உங்கள் இனிய நினைவுகள் என்றும்
எமது உள்ளங்களில் நிறைந்திருக்கும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சங்கத்தானை,
சாவகச்சேரி. (17764)

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1978 - 02 - 05



மறைவு 2002 - 04 - 25

### சுப்பிரமணியம் உதயகுமார்

(உதயன்)

திதி: 2003-05-14

அம்மா, அப்பா உன் முகம் காணாது
விழி நீர் சொரிய
தம்பி, தங்கை உன் முகம் காணாது
கலங்கி நிற்க
நீர் எங்கு சென்றீர்?

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

பலாலி. (17764)

## 31ஆம் நாள் நினைவலைகள்

மண்ணில் 13 - 10 - 1941



விண்ணில் 14 - 04 - 2003

### திருமதி இராசேஸ்வரி கனகராஜா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்)

*அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழிபேசி*
*பண்பாய் எமை வளர்த்த அன்புத் தெய்வமே!*
*உன்பால் நாம் கொண்ட பாசத்தின் மிகுதியால்*
*உனையே நினைந்து தவியாய்த் தவிக்கின்றோம்!*
*சிரித்த முகத்துடன் அறிவுரைகள் பல கூறி*
*எம்மை வழிநடத்திய அன்னையே – காலன்*
*விரித்த வலைதனிலே வீழ்ந்து நீ போனதனால்*
*விம்மியே அழுகின்றோம்! அம்மா நீ எங்குற்றாய்?*

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துத் தாள் பணிகின்றோம்.

தாரிகப்பற்று, நெல்லியடி கிழக்கு.
கரவெட்டி. (17915) - குடும்பத்தினர்.

## சமுர்த்தி வங்கிச் சங்கம் சுன்னாகத்தில் அமையும்

வலிகாமம் தெற்கு,மே14

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் இரண்டாவது சமுர்த்தி வங்கிச் சங்கம் சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது. இப்பகுதியில் உள்ள மர வேலைப் பயிற்சி நிலைய வளவில் இது அமைக்கப்படும்.

முதலாவது சமுர்த்தி வங்கிச் சங்கம் இணுவில் கிராமத்தில் அண்மையில் அமைக்கப்பட்டு செயற்படத் தொடங்கி உள்ளது. தாவடி, இணுவில், உடுவில், சங்குவேலி, கந்தரோடை போன்ற கிராம மக்கள் இதன் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

இரண்டாவது சமுர்த்தி வங்கிச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதும், ஏழாலை, குப்பிளான், ஈவினை, புன்னாலைக் கட்டுவன் மற்றும் சுன்னாகம் போன்ற கிராமங்களை சேர்ந்த மக்கள் இதன் மூலம் பயனடைவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-152)

## தமிழ்ப்புலவர் மாநாடு இன்று ஆதீனத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே14

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று புதன்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு ஈழத்துத் தமிழ்ப் புலவர் மாநாடு நடைபெறவுள்ளது.

மாநாட்டின் முதல் நாளான இன்று முற்பகல் 8மணி முதல் 9மணி வரை மாநாட்டில் பங்கு பற்றுநர்களைப் பதிவு செய்தலும், ஈழத்துத் தமிழ் நூற் காட்சிக்கான நூல்களைப் பொறுப்பேற்றலும் இடம்பெறும்.

நல்லை ஆதீன முதல்வர் தலைமையில் முற்பகல் 9மணி முதல் ஆரம்பமாகும் நிகழ்வில் அருள்வேண்டல், அருளுரை, தமிழ்மொழி, தமிழ்ப் புலவர்கள், தமிழினம் இந்த நாட்டில் என்றும் நிறை பெறுவதற்காக அருள வேண்டல் ஆகியன இடம்பெறும்.

தொடர்ந்து சைவப்புலவர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் பிற்பகல் 3மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் நாதஸ்வர இசை, மாநாட்டை ஆரம்பித்து வைத்து நல்லை ஆதீன முதல்வரால் வழங்கப்படும் அருளுரை, இந்து சமய கலாசார அமைச்சர் தியகேஸ்வரனின வாழ்த்துரை, தமிழ்நாடு செந்தமிழ்ச் செல்வி ஆசிரியரும், தென்னிந்திய தமிழ் சங்க மேலாளருமாகிய இரா.முத்துக் குமாரசாமியின் வாழ்த்துரை ஆகியனவும் இடம்பெறும். (எ-6)

## சாயி சமித்தியில் வெசாக் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே14

பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை வியாழக் கிழமை அதிகாலை 5.00 மணி முதல் வெசாக் தின நிகழ்வுகள் நடைபெறும்.

'புத்தபகவானின் போதனைகள்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

நண்பகல் நாராயண சேவையுடன் நிகழ்வுகள் நிறைவடையும்.(ஐ)

## 20 ஹெக்டயரில் கௌபி பயிர்ச்செய்கை

அராலி, மே14

சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் சிறுதானியப் பயிர்ச்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு நல்லின கௌபி விதைகள் வழங்கப்பட்டுள்ளன. மீசாலை, அறுகம்புலம் ஆகிய இடங்களில் கௌபி 20 ஹெக்டயர் நிலப்பரப்பில் விதைக்கப்பட்டுள்ளதாக சாவகச்சேரி விவசாயப் போதனாசிரியர் தெரிவித்தார். (ஐ-14)

## சீருடை முத்திரைகளை பெறக்கோரிக்கை

அராலி,மே 14

2003ஆம் ஆண்டின் பாடசாலை சீருடைகளை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்கும் பணி நாளை 15ஆம் திகதியுடன் முடிக்கப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. எனவே 31.12.2002 வரை பாடசாலை சீருடைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த மாணவருக்கான கூப்பன்கள் கிடைக்காத பெற்றோர் பிரதேச செயலகத்தில் அவர்களுக்குரிய கூப்பன்களைப் பெற்றுக்கொள்ளும்படியும் அக்கூப்பன்களை உபயோகித்து 2003 வைகாசி 15ஆம் திகதிக்கு முன் அவர்களுக்குரிய கூட்டுறவுக் கிளைகள் மூலம் சீருடைத் துணிகளைப் பெற்றுக்கொள்ளும்படி யாழ். பிரதேச செயலர் எஸ்.செந்தில் நந்தனன் கோரியுள்ளார். (ஐ)


*மானிப்பாய் சுகாதார, சமூக சுற்றாடல் விவகார சபையின் கீழ் இயங்கிவரும்*

## மானிப்பாய் மெடிக் கிளினிக் இடம்மாற்றம்

மேற்படி கிளினிக் 15.05.2003 வியாழக்கிழமை தொடக்கம் இல.200, யாழ்வீதி, மானிப்பாய் நகர மண்டபத்திற்கு முன்பாகவுள்ள தனியார் கட்டடத்தில் காலை 7.30 மணிக்கு வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டு இயங்கும் என அறியத்தருகின்றோம்.

எமது சேவைகள்:-

* விசேட மருத்துவ நிபுணரின் வைத்திய ஆலோசனை, சேவைகள்.
* பெண் நோயியல், மகப்பேற்று நிபுணரின் வைத்திய ஆலோசனை, சேவைகள்.
* கண் வைத்திய நிபுணரின் ஆலோசனை, சேவைகள்.
* கண்ணாடிப் பரிசோதனை, கண்ணாடி வழங்கல்.
* ஆய்வுகூடப் பரிசோதனை.
* ECG பரிசோதனை.
* பல் வைத்தியம், பல் கட்டுதல்

இவை யாவும் மிக கைதேர்ந்த, அனுபவமிக்க வைத்திய உயர் தராதரம் பெற்ற நிபுணர்களால் நடத்தப்படுகின்றன.

வெளிநோயாளர் பிரிவு:

தினமும் காலை 9.30-12.30 வரை, மாலை 3.30-6.30 வரை வெளிநோயாளர் பிரிவு அனுபவமிக்க டாக்டரினால் நடத்தப்படுகின்றது.

பாமசி:-

பல வருடங்கள் அனுபவத்துடன் இதற்கான தராதரம் பெற்ற பாமசிஸ்ட் அவர்களின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றது. குறைந்த விலையில் தராதரமான மருந்துகள்.

இவ்வேளையில் சென்ற 3 வருடங்களாக எமது அளப்பரிய முன்னேற்றத்திற்கு ஆதரவாக இருந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இவ்வைபவத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு வாடிக்கையாளர்கள், நலன்விரும்பிகள், இச்சபையின் அங்கத்தவர் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் சுகாதார சமூக,
சுற்றாடல் விவகார சபை.

(சி-27891)


## துயர் பகிர்கின்றோம்

யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
எமது சக ஆசிரியர்
திருமதி சியாமளா கமலசிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி சிவயோகநாதன் இலட்சுமியம்மா
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் ஆசிரியரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்.

(17804) *- ஆசிரியர் நலன்புரிக்கழகம்.*

## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 - 03 - 1924



இறப்பு 14 - 05 - 2002

### அமரர் சின்னையா சூசைப்பிள்ளை

*ஆத்மா சாந்தியடைக!*

என்றும் உம் நினைவில்:
*மனைவி, மருமகன், பேரப்பிள்ளைகள், சுற்றத்தார், நண்பர்கள்.*

211, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (17925)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 19 - 01 - 1912



உதிர்வு: 12 - 04 - 2003

### திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

(உடுப்பிட்டி செல்லப்பாவின் மனைவி)

குறையாத அன்பும் வற்றாத பாசமும் - நம்
நெஞ்சத்தில் நீங்காத நினைவுகள்!
கந்தனே கதி என்று காத்திருந்து
அவன் பதமே பதி என்று
பரலோகம் சென்றுவிட்டீர் -உம்
பிரிவால் பதறித் துயருறும் பந்தங்கள் நாம்
பாசமான நினைவுடன் கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.

பாசநினைவுகளுடன்:
மகன்மார்,மகள்மார்,மருமக்கள்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

27, வைமன் வீதி,
நல்லூர்.

(C27889)

உதயன்

# தீர்வின்றித் தீவிரமடையும் அரசமைப்பு நெருக்கடி

தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ள அரசமைப்பு நெருக்கடிக்கு தீர்வு இன்னும் கிட்டவில்லை. தீர்வு கிட்டுவதற்கான அறிகுறியும் இல்லை. அது தீவிரமடைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின்கீழ் இருந்து 'பிடுங்கி' எடுக்கும் தனது உத்தரவு, அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பிரசுரமாகா விட்டாலும்கூட சட்ட ரீதியாகச் செல்லுபடியாகும் என்பது ஜனாதிபதியின் தரப்பு வாதம்.

எனினும், அந்த உத்தரவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை தாமதமின்றி அச்சிட்டு அதில் ஐந்து பிரதிகளை தனக்கு அனுப்பிவைக்கும்படி, அரச அச்சகரையும் ஊடகத்துறை அமைச்சரையும் கடிதம் மூலம் பணித்திருக்கின்றார் ஜனாதிபதி குமாரதுங்க.

அதேசமயம், தனது அனுமதியின்றி சம்பந்தப்பட்ட வர்த்தமானியை அச்சிடவேண்டாம் என்று அரச அச்சகருக்கு உத்தரவிட்டிருக்கின்றார் ஊடகத்துறை அமைச்சர்.

ஆக, இரண்டு மேலிட உத்தரவுகளுக்கு நடுவில் 'சிண்டைப் பிடுங்கிக் கொண்டு' தவிக்கிறார் அரச அச்சகர்.

ஆனால், அரச அச்சகரும், ஊடகத்துறை அமைச்சரும் - ஏன், பிரதமர் ரணிலின் அரசுத் தரப்பினருமே - ஒரு விடயத்தில் ஒற்றுமைப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தச் சிக்கலில் சட்டமா அதிபரின் சட்ட ஆலோசனையைக் கோருவது எனவும், அவரது சிபாரிசுக்கு அமைய நடந்துகொள்ளவது எனவும் அவர்கள் தீர்மானித்திருக்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

ஆனால், சட்டமா அதிபரோ இந்த விடயத்தில் பல தரப்புகள் சம்பந்தப்பட்டிருந்தாலும் நாட்டில் தலைவி என்ற வகையில் ஜனாதிபதிக்கு மட்டுமே தனது முடிவை - சிபார்சை - ஆலோசனையை வழங்குவார் எனவும், அரச அச்சகருக்கோ அல்லது ஊடகத்துறை அமைச்சருக்கோ வழங்கமாட்டார் எனவும் கூறப்படுகின்றது.

அதேசமயம், அமைச்சுக்களின் பொறுப்புகளை பிரதமரின் கலந்தாலோசனையுடன் மட்டுமே ஜனாதிபதி மாற்றமுடியும் என சட்டமா அதிபர் கருதுகிறார் என பிரதமரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இப்படி இடியப்பச்சிக்கலாக விடயம் இழுபறிப்பட, நாட்டின் அரசமைப்பு நெருக்கடியோ நீடித்துச் செல்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் சட்ட ரீதியான அதிகாரங்களுக்கு ஐக்கிய தேசிய முன்னணி கட்டுப்பட்டு, அதை மதித்து நடக்காவிட்டால், தற்போதைய அரசை பதவி நீக்கம் செய்யும்படியும், அதற்கு மேலும் தேவைப்பட்டால் கடைசி வழிவகையாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படியும் ஜனாதிபதியைத் தாங்கள் வலியுறுத்தப்போகின்றார்கள் என ஜனாதிபதியின் தரப்பைச் சேர்ந்தவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ கூறுகின்றார்.

தற்போதைய அரசை பதவி நீக்கம் செய்யும் நிலைமை ஏற்பட்டால், தற்போது எதிரணியில் உள்ள தனது பொ.ஐ.முன்னணியை, ஜே.வி.பியுடன் கூட்டமைக்க வைத்து புதிய அரசை உருவாக்க முயற்சிக்கலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மனப்பால் குடிக்கின்றார்.

அப்படி அரசு அமைத்தால், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டியிருக்கும். ஆனால், இப்போதைய நிலையில் அது தங்களுக்குச் சரிப்பட்டு வராது என்பதும் மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்கு தெரியும்.

எனவே, அரசை அமைத்துவிட்டு, அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கும் பலப் பரீட்சையைச் சந்திக்காமலேயே - நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு - காபந்து அரசாக தங்கள் அரசை நீடித்துக்கொண்டே - அதன்கீழ் பொதுத் தேர்தலை நடத்தி, வாக்கெடுப்பைச் சந்திக்கலாம் என்பது எதிரணித் திட்டம்.

முதலில் தற்போதைய அரசை பதவி நீக்கம் செய்யும்படியும், பின்னர் கடைசி ஆயுதமாக நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படியும் ஜனாதிபதிக்கு எதிரணி கொடுக்கும் வற்புறுத்தலின் பின்னணி இதுதான்.

போகிற போக்கைப் பார்த்தால், அமைச்சுப் பொறுப்புகளை தன்னிச்சைப்படி - ஒருதலைப்பட்சமாக - 'பிடுங்கும்' ஜனாதிபதியின் நடவடிக்கை மூன்று வருடங்களுக்குள் மூன்றாவது பொதுத் தேர்தலுக்கு வழிசெய்துவிடும்போல் உள்ளது.

## யாழ். குடாநாட்டில்

# திராட்சைப் பயிர்ச் செய்கை இவ்வருடத்தில் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே14

வலி.வடக்கு, வலி.தென். மேற்கு மற்றும் வலி.கிழக்குப் பகுதிகளிலுள்ள விவசாயிகள் இம்முறை திராட்சைப் பயிர்ச் செய்கையில் அதிக ஆர்வங்காட்டி வருகின்றனர்.

இப்பகுதிகளில் கடந்த வருடங்களைவிட இவ்வருடம் அதிகளவிலான திராட்சை பயிரிடப்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

கடந்த சில வருடங்களாக யாழ். குடாநாட்டில் அரிதாகக் காணப்பட்டு வந்த திராட்சைப்பழத்தை இப்போது சர்வசாதாரணமாகப் பெறக்கூடியதாக உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கோண்டாவில், கோப்பாய், உரும்பிராய், மல்லாகம், இளவாலை, பெரியவிளான், பண்டத்தரிப்பு, சங்கானை ஆகிய கிராமங்களில் இம்முறை அதிகளவிலான திராட்சையை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால் முற்றாக அழிந்து போன திராட்சைப் பயிரை மீண்டும் பயிரிட்டு அதன் மூலம் நிறைய வருமானத்தை ஈட்டமுடியும் என திராட்சை பயிரிடும் விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். தற்போதுள்ள சுமுகமான சூழ்நிலையில் திராட்சைப் பழத்தை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதற்கான வசதியும் கிடைத்துள்ளதென அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடங்களில் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்த திராட்சைப்பழத்தின் விலை இவ்வருடம் வீழ்ச்சி அடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-8)

# நாட்டு நடப்பு

## ஆரிவள் அறிவீர் நீரே!

நேற்று நான் மாலை வேளை
நின்றனன் நல்லூர் அண்டை
உற்று நான் பார்த்தேன் ஒன்றை
ஒன்றுமாய்ப் புரியவில்லை
சற்றே கால் - சட்டை ஒன்றை
சரிவர இழுத்துமாட்டி
முற்றிலும் தலை முடியதனை
முழுதுமாய் ஒட்ட வெட்டி
வற்றிய உடலில் நல்ல
வாசனைப் பொருள்கள் பூசி
முற்றிலும் ஆங்கிலத்தில் ஏதோ
முணுமுணுத்து அவளும் செல்ல
சற்றே அருகில் சென்று கேட்க
சரவணமுத்து மாமா வீட்டில்
பெற்ற என் தாய் வாழுகின்றாள்
போவதற்கு வழி ஏதென்றாள்
அப்போது நான் அறிந்து கொண்டேன்
அட இவள் தமிழ்ப் பெண் என்று.

- விகடகவி

# பேராதனைத் தமிழ்ச் சங்கத்தின் பவள விழா இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே14

பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு அதன் பவள விழாவைக் கொண்டாடுகிறது. இதனை ஒட்டி நாடளாவிய ரீதியில் இலக்கியப் போட்டி ஒன்றை நடத்த சங்கம் தீர்மானித்துள்ளது.

பாடசாலை கீழ்ப்பிரிவு (தரம் 10இற்கு உட்பட்ட மாணவர்கள்), பாடசாலை மேற்பிரிவு (உயர்தர வகுப்பு மாணவர்கள்), உயர் கல்வி மாணவர்கள் ஏனையோர்கள் என்ற நான்கு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

★ கவிதை, சிறுகதை: எந்தக் கருவிலும் அமையலாம்.
கவிதை - இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல்.
சிறுகதை ஐந்து பக்கங்களுக்கு மேற்படாமல்.
சகல பிரிவினரும் பங்குபற்றலாம்.

★ கட்டுரை: (பாடசாலை கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு, உயர்கல்வி மாணவர்களுக்கு மட்டுமே நடத்தப்படும்)

தலைப்புகள் வருமாறு:

i. பாடசாலை கீழ்ப்பிரிவு:
"ஊருக்கு உழைத்திடல் யோகம்" (400 சொற்கள்)
ii. பாடசாலை மேற்பிரிவு:
"பாடசாலைகளில் அறக்கல்வியின் அவசியம்" (800 சொற்கள்).
iii. உயர் கல்வி மாணவர்கள்:
"வளர்ந்துவரும் இன்றைய விஞ்ஞான உலகில் தாய் மொழிக் கல்வியின் அவசியம்" (1000 சொற்கள்).

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் ஆக்கங்கள் அனுப்புவதற்கான முடிவுத் திகதி: 15.06.2003 ஆகும்.

முகவரி: தமிழ்ச் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.

தங்கள் பெயர், பிரிவு, விலாசம் போன்ற விவரங்களை ஆக்கங்களில் குறிப்பிடவேண்டும்.

பரிசில்கள் பவள விழா வைபவத்தில் வழங்கப்படும்.

இவ்வாறு தமிழ்ச் சங்கம் அறிவுறுத்துள்ளது. (ஐ)



யாழ்.நகரம் மெல்லமெல்ல போக்குவரத்து நெரிசல் மிகுந்த நகரமாக மாறிவருகிறது. குறிப்பாக ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி, கே.கே.எஸ்.வீதி என்பனவற்றில் வாகன நெரிசல் அடிக்கடி ஏற்படு கின்றது.

ஸ்ரான்லி வீதியில் நேற்றுமுன்தினம் காலை நெரிசல் ஏற்பட்டு போக்கு வரத்து சிறிது நேரம் ஸ்தம்பித்திருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# கல்வி அதிகாரிகள் குழு தீவுப் பகுதிக்கு விஜயம்

மண்டைதீவு,மே14

யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்துள்ள மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் தீவகக் கல்வி வலயத்தின் பாடசாலைகளுக்கு விஜயஞ்செய்து அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டுள்ளது.

பாடசாலைகளின் கல்வி அபிவிருத்தி, பாடசாலை மட்ட கணிப்பீட்டுத் திட்டம், தர மேம்பாட்டுக்கான அமுலாக்கல் திட்டம், பாடசாலை அபிவிருத்திச் சங்க நிதிப் பயன்பாடு உட்படப் பல விடயங்கள் ஆராயப்பட்டன. ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம், புங்குடுதீவு சித்தி விநாயர் வித்தியாலயம், வேலணை மேற்கு நடராசா வித்தியாலயம், புனித மரியாள் வித்தியாலயம் ஆகியவற்றுக்கே இக்குழு சென்றது.

பிற்பகல் இக்குழுவினர் வேலணையில் உள்ள தீவகக் கல்வி வலயத்திற்குச் சென்று அங்கு கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தினார்கள். இவர்களுடன் யாழ்.கல்வி வலய அதிகாரிகளும் சென்றிருந்தனர். (ஐ-88-10)

# சாரதி 'லைசன்ஸ்' வழங்க ஞாயிறு முதல் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.செயலக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் மீண்டும் எதிர்வரும் 18ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளன.

அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்துப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஆகியன 18ஆம் திகதி ஆரம்பமாகி எதிர்வரும் 30ஆம் திகதி வரையும் நடைபெறவுள்ளதாக போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

தினமும் பரீட்சைக்கு அழைக்கப்படுவோரில் கணிசமான எண்ணிக்கையானவர்கள் சமுகம் தருவதில்லை எனவும், பின்னர் அவர்கள் வருகை தந்து வேறொரு தினத்தில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி பெற்றுச்செல்வதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-10)

## நாளை

வைகாசி 01
வியாழக்கிழமை
15.05.2003
திதி : சதுர்த்தசி
நண்பகல் 12.17 வரை
நட்சத்திரம் : சுவாதி
பிற்பகல் 6.08 வரை
பூரணை விரதம்
சுபநேரம் : 1.23 - 2.53
ராகுகாலம் : 7.23 - 8.53
(பழைய நேரப்படி)

## உதய வாக்கு

இயமனைத் திருமணம் செய்ய விரும்பினால் எருமையோடு பற்றி அறிந்திருக்க வேண்டும்.

# மழைக் காலநிலை சில தினங்கள் நீடிக்கும்

யாழ்ப்பாணம்,மே14

குடாநாட்டில் அடுத்த சில தினங்களுக்கு மப்பும் மந்தாரமுமான காலநிலை நிலவும் என்று யாழ்.வானிலை அவதான நிலையம் தெரிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் காலை 9மணி தொடக்கம் நேற்றுக்காலை 9 மணிவரையான காலப்பகுதியில் 9.1 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாகவும் வானிலை அவதான நிலையத்தின் பதிவுகள் தெரிவித்தன.

இடையிடையே மழை பெய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் இலேசான காற்று வீசக்கூடிய சாத்தியக் கூறுகளும் உள்ளதாகவும் அவதான நிலையத்தின் பொறுப்பாளர் விபுஷ்பநாதன் தெரிவித்தார். (ஐ-10)

# தொலைபேசி இணைப்புக்காக தோண்டிய கிடங்கில் மிதிவெடி

யாழ்ப்பாணம்,மே14

பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதிக்கு தொலைபேசி இணைப்பு வசதியை ஏற்படுத்துவதற்காகத் தரையில் கிடங்கு வெட்டிய வேளையில் அக்கிடங்கில் இருந்து மிதிவெடி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஓடக்கரை, கல்லூரி வீதிப் பகுதியில் கிடங்கு வெட்டிய வேளையிலேயே இது கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து உடனடியாகப் படையினருக்கு அறிவிக்கப்பட்டது. (ஐ-10-15)

# முஹம்மது நபி கூறும் தத்துவங்கள் சமாதான உலகுக்கான போதனைகள்



சமயத்தில் வேறுபாடுகள் இருப்பது இயற்கை. ஆனால், பின்பற்றுபவர்களின் இரத்தத்திற்கும் அவரவர் இன மதத்திற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. இலங்கையைப் பொறுத்தவரை சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற நான்கு இனங்களும் சிங்களம், தமிழ், ஆகிய மொழிகளும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களும் இருந்து வருகின்றன. இன்றைய சூழலில் இன, மத, மொழி வேறுபாடுகளால் நாம் பிரிந்து நில்லாது தேசப்பற்றுடன் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்பதை நபி(ஸல்) அவர்களின் பிறந்த தினத்தில் பெருமானாரின் வாழ்வினூடாக உணர்வோம்.

## நபி(ஸல்)பிறந்ததினம் இன்று

அராபிய மக்களிடையே நபி(ஸல்) அவர்கள் இறைவனை அடைவதற்கான பாதையைப் பற்றியும், சமாதானம், சகோதரத்துவம் போன்ற உன்னத கொள்கைகளைப் பற்றியும் போதித்தார்கள் குலப்பெருமை, கொலை, வெறி போன்ற தீவினைகளையும், மக்களிடையே ஏற்பட்டிருந்த பிளவுகளையும் நீக்கி, அவர்களை ஒரு கொடியின் கீழ் ஒன்றுபடச் செய்தார்கள். அவ்ஸ், கஸ்ரஜ் வர்க்கத்தாரிடையே பல தலைமுறைகளாக நிலவி வந்த பகைமையைச் சமாதானமுறையில் தீர்த்து வைத்தார்கள். மதீனாவில் சிறுபான்மையினராக யூதர்களும், கிறிஸ்தவர்களும் வாழ்ந்து வந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் நினைத்திருந்தால் அவர்களை எல்லாம் கொலை செய்தோ அல்லது நாட்டை விட்டுத் துரத்தியோ இருக்கலாம். ஆனால், நபி(ஸல்) அவர்கள் அப்படிச செய்யவில்லை. சமாதான வாழ்வையே தனது இலட்சியமாகக் கொண்டார்கள். அதனால் யூதர்களுடனும் கிறிஸ்தவர்களுடனும் மதீனா சாசனம் என்னும் ஓர் உடன்படிக்கைச் செய்துகொண்டார்கள். இதன் மூலம் நபி(ஸல்) அவர்கள் சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து நடந்து சமாதானத்தை நிலைநாட்டினார்கள்.

இது இன்றைய உலக நாடுகளுக்கு, குறிப்பாக எமது நாட்டுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இன முரண்பாடுகள் முற்றி போராக வெடித்து பாரிய உயிரிழப்புகள் சொத்தழிவுகளின் பின் சமாதான சகவாழ்வுக்கான பாதை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதையினூடு இறுதி இலக்கான நிரந்தர சமாதானத்தை அடையவேண்டுமாயின் பரஸ்பரம் புரிந்துணர்வும் நம்பிக்கையும் அவசியமானவை.

இஸ்லாம் மதம் நம்பிக்கையை முக்கியமாக வலியுறுத்துகிறது. நம்பிக்கையும் விடாமுயற்சியும் வெற்றியின் இரகசியங்கள் என்று அது போதிக்கின்றது. குர் ஆனின் அடிப்படையிலே மனித நடைமுறைகள் ஆளப்படவேண்டும் என்ற இஸ்லாத்தின் உயரிய கருத்துக்கள் இன்று எங்கும் முன்வைக்கப்படுகின்றன.

"அவர்கள் சமாதானத்தின் பக்கம் சாய்ந்தால் நீங்களும் அதன்பக்கம் சாயுங்கள். அல்லாஹ்வையும் நம்புங்கள். நிச்சயமாக அல்லாஹ் செவியுறுவோனும் யாவையும் நன்கறிந்தோனுமாயிருக்கிறான்" என்று குர் ஆன் கூறுகிறது. இஸ்லாம், உலக சமாதானத்தை எவ்வளவு தூரம் வலியுறுத்துகின்றது என்பதை கீழ்வரும் இறை வசனத்தின் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

ஆரம்பகாலத்தில் அமைதியுடனும் சமாதானத்துடனும் இருந்த இக் குவலயம் இவ்விழி நிலைக்கு வரக் காரணமென்ன என்பதையும், இதனை எவ்வாறு தடுத்து நிறுத்தி மீண்டும் சமாதானத்துடனும் சுபீட்சத்துடனும் வழி நடத்தலாம் என்பதைச் சிந்திப்பதும் செயற்படுத்துவதும் உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். உலகம் இறைவனால் மனிதனுக்காக படைக்கப்பட்டுள்ளது. ஆனால், மனிதனோ இறைவனுக்காகப் படைக்கப்பட்டுள்ளான் என்பது இஸ்லாத்தின் அடிப்படைக்கொள்கையாகும். மனிதனைப் படைத்த இறைவன் இவனுக்கு ஒரு நோக்கத்தையும் சிறந்த இலட்சியத்தையும் கொடுத்து சாந்தியுடனும் சமாதானத்துடனும் வாழும் வழியையும் காட்டியுள்ளான். இந்தவழிதான் இஸ்லாம் ஆகும். இஸ்லாம் என்பதன் பொருள் சாந்தி, சமாதானம் என்பதாகும். ஓர் இடத்தில் இருந்து மறு இடத்திற்குச் செல்வதற்கு நேரான வழிமட்டும் தான் உண்டு.

இபபுவி அமைதி இழந்தமைக்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கூறலாம். இனம், நிறம், குலம், மொழி, தேசியம் ஆகியவற்றின் காழ்ப்புணர்வே ஆகும். இவற்றை அல்குர் ஆன் பின்வரும் திருவசனத்தின் மூலம் தகர்த்தெறிகிறது.

"மக்களே, நாம் உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து படைத்தோம். நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைப் பல சமூகங்களாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் பயபக்தி உடையவராக இருக்கின்றாரோ அவரே அல்லாஹ் இடத்தில் மிகக் கண்ணியம் உள்ளவராவார். அல்லாஹ் எல்லாவற்றையும் நன்கறிந்தோனும் தெளிந்த ஞானம் உடையோனுமாகும்.

சாந்தி, சமாதானம் அனைத்தும் பொதிந்த "லாஇலாஹ இல்லல்லாஹ்" என்ற திருக்கலிமாவே அனைவருக்கும் வெற்றியின் இலக்காக இருக்க வேண்டும். எமது நாட்டிலும் உலகின் பிற நாடுகளிலும் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், நேர்மை என்பன ஊற்றெடுத்து வளர்ச்சிபெற இன, மத, மொழி, சாதி, பால் பேதங்களுக்கப்பால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து நேரிய வழியில் செல்வோமாக. ★

தொகுப்பு :
ஷாந்தன் சத்தியகீர்த்தி

இஸ்லாத்தின் வழியைப் போதித்த பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லோருக்கும் அழகிய முன்மாதிரியானவர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பற்றி அறிஞர்கள் சிலர் கூறிய கருத்துக்களை இங்கே நோக்குவது பொருத்தமானது.

★ முஹம்மது நபியின் நற்குணங்கள் எனக்குப் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கையைப் பற்றி அவருடைய கொள்கைகளை நான் ஆதரிக்கின்றேன். இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் பிரிட்டன் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன்.

- பெர்னாட் ஷா

★ ஆட்சிபுரியும் அமைச்சர்கள் நபி பெருமான் வகுத்த சீர்திருத்தங்களைப் பின்பற்றி நடக்கவேண்டும்.

- காந்திஜி

★ திருக்குர் ஆனுக்கும், தூதர் முஹம்மது அவர்களுக்கும் என் வசுவாசத்தை வழங்குகின்றேன். குர் ஆனின் கொள்கைக்கு இணங்க ஒரே விதமான ஆட்சியை உலகெங்கும் நிறுவக்கூடிய காலம் வெகு தூரத்திலில்லை.

- நெப்போலியன்.

★ கண்மூடிப் பழக்கங்களை மண்மூடச்செய்து, காட்டுமிராண்டித் தன்மையினரை உயர்ந்த சமுதாயமாய் உருவாக்கி நெருக்கடியான நேரங்களிலும் இலட்சியங்களை நிறைவேற்றத் தவறாத கடமை வீரர் நபிகள் நாயகம்.

- அறிஞர் அண்ணா

★ செந்தழலைக் குளிராகவும் சினம் கொண்டு சீறிவரும் பகையை குணங்கொண்ட நட்பாகவும் மாற்றவல்ல மனவலிமை மிக்க மேலோர் நபிகள் நாயகம்.

- கலைஞர் கருணாநிதி

★ முஹம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம் அவர் கொண்டிருந்த உறுதியும், ஊக்கமும். இத்தகைய உறுதி அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று இரண்டாவது காரணம் இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும் சகோதரத்துவமும் ஆகும்.

- ஜவஹர்லால் நேரு

## முதியோர் இல்லக் காணியில் தென்னைச் செய்கை

யாழ்ப்பாணம்,மே14

கைதடி அரச முதியோர் இல்லத்தைச் சூழவுள்ள 20 ஏக்கர் நிலம் பயன்படுத்தப்படாதிருப்பதாக பிரதேச செயலருக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பயன்படாதிருக்கும் இக்காணியில் தென்னை மீள் நடுகைத் திட்டத்தை மேற்கொள்ளமுடியும் என்று இல்லப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.(ஐ-14)

## மானிப்பாயில் இந்து விழா

மானிப்பாயில் உள்ள இந்து சமய விருத்திச் சங்கங்கள் இணைந்து இந்து மாநாட்டை ஒட்டி நடத்தும் இந்து விழா இன்று காலை 9 மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

மானிப்பாய் கோவில்பற்று இந்து சமய விருத்திச் சங்கச் செயலாளர் இ.சுப்பையா நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றுவர். (ஐ)

## பளை மாணவருக்கு சீருடை முத்திரை விநியோகம்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு, யாழ்.மாவட்ட பாடசாலைகளில் கல்வியிலும் மாணவர்களுக்கான சீருடை முத்திரை விநியோகம் வடமராட்சியிலும், யாழ்ப்பாணத்திலும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில், பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க நெல்லியடிக் கிளையில் நேற்று இந்த விநியோகம் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில், மானிப்பாய் வீதியில் முன்பு பிரதேச செயலகம் இயங்கிய 129ஆம் இலக்க கட்டடத்தில் நாளை வியாழக்கிழமை சீருடை முத்திரை விநியோகிக்கப்படவுள்ளதாக பளைப் பிரதேச செயலர் எஸ்.புத்திரசிகாமணி அறிவித்துள்ளார். (எ-9)


# COMPUTER COURSES


New Batches Start on Batch 1 :25.05.2003, Batch 2 :28.05.2003, Batch 3 :14.06.2003 at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Computer Programming

Diploma in Java Programming

Diploma in Visual C Programming

Diploma in Visual Basic Programming

Diploma in Information Technology.

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING

NEXT EX GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN U.K!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!

IELTS

International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is issued by the University of Cambridge, London.

Diploma in MS Office

Diploma in Internet Technology

Diploma in Hardware Technology

Diploma in Eng. Drawing & AutoCAD

Diploma in Desk Top Publishing

Adobe PageMaker, Adobe Photoshop 07, Adobe Premiere, Macromedia Flash, CorelDRAW, MS Word, MS Excel, MS Access, ORACLE 9i, Pascal

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )

Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk

Branches:
IIS, Nelliyady, Karaveddy
IIS, Main Road, Chankanai.

யாழ்ப்பாணம்



மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் 'சர்வதேசப் பிரிவு' கடந்த திங்கட்கிழமை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் மக்கள் வங்கியின் உதவிப் பிரதேச முகாமையாளர் ரீ.ஆனந்தராஜா மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் நிகழ்வுக்குத் தலைமை தாங்கிய மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளர் ரீ.ரகுவும் காணப்படுகிறார்.

வாடிக்கையாளர்களைத் திருப்தி செய்யும் வகையில் எதிர்காலத்தில் மக்கள் வங்கி ஆற்றவேண்டிய பணிகள் குறித்த ஆலோசனை அடங்கிய மகஜரை பிரதேச முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயரிடம் வங்கியின் வாடிக்கையாளர் எஸ்.விக்னராஜா கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : ரமா)*

# சைக்கிள்கள், நாய்களுக்கு இலக்கத்தகடு அவசியம்

## வலி.தெற்கு பிரதேச சபை அறிவிப்பு

வலிகாமம் தெற்கு,மே14

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினரால் இவ்வருடத்துக்குரிய சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகள், வளர்ப்பு நாய்களுக்கான இலக்கத் தகடுகள் என்பன விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

பிரதேச சபையிலும், பிரதேச சபை எல்லைக்குட்பட்ட முக்கிய சந்திகளிலும் பிரதேச சபை உத்தியோகத்தர்களால் சைக்கிள்களுக்கான வாகன இலக்க உரிமத் தகடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இவ்வுரிமத் தகடுகள் பெற்றுக்கொள்ளாதிருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே, இவற்றை உரியவர்கள் பிரதேச சபை உப அலுவலகங்களிலோ அல்லது பிரதேச சபை வருமான வரி மேற்பார்வையாளரிடமோ சென்று பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் தெற்கு பிரதேச சபை செயலாளர் ந.சிவபாலதர்மகுலசிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பிரதேச சபை எல்லைக்குட்பட்ட இடங்களில் கட்டாக்காலி நாய்கள், தெரு நாய்கள் என்பனவற்றின் தொல்லைகள் அதிகரித்துள்ளன. வீதியில் போய் வருவோருக்கு இந் நாய்களால் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் அவற்றை பிடித்து அழிக்கும் நடவடிக்கைகள் விரைவில் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவுள்ளன.

கட்டாக்காலி தெருநாய்கள் அழிப்பு நடவடிக்கையின்போது வீதிகளில் காணப்படும் எவ்வகை நாய்களாக இருப்பினும் அவற்றைப் பிடித்து அழிக்க பிரதேசசபை முடிவு செய்துள்ளதாகவும் -

தெருநாய்களை அழிப்பதற்கு வசதியாக பொதுமக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத்தகடுகள் பெற்று நாய்களின் கழுத்தில் கட்டித் தொங்கவிடவேண்டும் எனவும் பிரதேச சபையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சைக்கிள்களுக்குரிய உரிமத தடுகள் இல்லாத வாகனசொந்தக்காரர் மீது எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-152)

## வீடியோப் படக்காட்சி

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகு வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் பரதனின் 'ஆவாரம்பூ' எனும் திரைப்படம் (தமிழ்) எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அகவொளி கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மே14

'அகவொளி' நிறுவனம் நடத்தும் முழுநிலா கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சென்.பற்றிக்ஸ் வீதியில் உள்ள 'அகவொளி' நிலையத்தில் நடைபெறும்.

'ஆக்ரோஷ உணர்வுகளை கையாளல்' என்ற தலைப்பில், திருமதி கோகிலா மகேந்திரன் (உளவள துணையாளர், பிரதிக் கல்வி பணிப்பாளர்) உரையாற்றுவார். (ஐ)

# கல்வி முறையில் புகுத்தப்பட்ட மாற்றங்களே இந்து கலாசாரச் சீரழிவுகளுக்குக் காரணம்

## யாழ். நீதிவான் விக்னராஜா உரை

யாழ்ப்பாணம்,மே14

எமது கல்வி முறைத் திட்டங்களில் ஏற்பட்ட மாற்றங்களே இந்து கலாசாரச் சீரழிவுகளுக்கு முக்கிய காரணமாகும். ஆசிரியர்கள், பெற்றோர் சமய நெறியில் நின்று இளஞ்சந்ததிக்கு வழிகாட்டியாகத் திகழவேண்டும்.

- இப்படி ஆலோசனை வழங்கியுள்ளார் யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா.

2ஆவது உலக இந்து மாநாட்டை ஒட்டி கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலயத்தில் நடந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஆலய பரிபாலன சபையின் ஏற்பாட்டில் நடந்த இந்த நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:-

இந்துமதம் சிந்துவெளி நாகரிக காலம் முதல் நிலைபெற்று நிற்கின்றது. கி.பி.1,500 ஆண்டுகளில் 150 ஆண்டு காலத்தில் போர்த்துக்கேயரும் பின்னர் 150 ஆண்டு காலத்தில் ஒல்லாந்தரும் இந்து மதத்தை அழிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். சைவ ஆலயங்களை இடித்து நாசப்படுத்தினர். அதன்பின் ஆங்கிலேயர் காலத்தில் இந்துமதத்துக்கு எதிராகப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படவில்லை. கட்டுப்பாடுகளின் மத்தியில் இந்துமதம் புத்துயிர் பெற்றது. ஆறுமுகநாவலர் தோன்றி மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். கிறிஸ்தவ பாதிரியார் பீற்றர் பேர்சிவலின் வேண்டுதலுக்கு ஏற்ப விவிலிய பைபிளை தமிழில் மொழி பெயர்த்து, இந்துமத மறுமலர்ச்சியுடன் கிறிஸ்தவ சமயத்தை வளர்க்கவும் ஆறுமுகநாவலர் உதவினார்.

சிக்காக்கோவில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய உரை இந்துமதத்தின் தனித்துவத்தைக் காட்டி நிற்கின்றது. சகிப்புத்தன்மை, சுய விமர்சன சுதந்திரம் ஆகிய சீரிய கோட்பாடுகளை அந்த உரைமூலம் அவர் உலகுக்குக் காட்டியுள்ளார். எல்லா மதங்களும் சமமானவையாக இருந்தபோதும் இந்துமதம் ஏனைய மதங்களை விட தாழ்வானது அல்ல என்று உலக ரீதியாக அவர் நிலைநாட்டினார். மதங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதேநேரம் எல்லா மதங்களையும் அங்கீகரிக்கும் தன்மையும் இருக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

'நெற்றிக் கண்களைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என சிவபெருமானுக்கு நக்கீரர் தெரிவித்தது போன்று நக்கீரர் வழியில் குற்றம் குற்றமே என்று சரிய இலட்சியத்துடன் இந்து மதம் முன்செல்ல வேண்டும். அந்த வழியில் செயற்படுவதன் மூலமே இன்றுள்ள சவால்களை இந்துமதம் எதிர்கொள்ளமுடியும்.

எமது கல்வி முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இந்து மதத்தில் சீரழிவுகள் ஏற்பட முக்கிய காரணமாகும். நாவலர் மறுமலர்ச்சி காலத்தில் அவர் ஆரம்பித்த பல பாடசாலைகளை அரசாங்கம் அதிகரித்தது. அதன்பின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த கல்வித் திட்டங்கள் இந்துசமய வாழ்க்கைக்குப் பயன்படுவதாக இல்லை. பாடசாலைக் கற்பித்தலில் இந்து சமயக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

ஆகவே, ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமயநெறியில் நின்று இளஞ் சந்ததிக்கு வழிகாட்டவேண்டும். சொல்லில் மட்டுமல்லாது செயலிலும் காட்ட சமயவாதிகள் முன்வரவேண்டும் - என்றார் நீதிவான். (ஐ-3)

# விவசாயிகள் மீது சந்தை வியாபாரிகள் குற்றச்சாட்டு சுமத்துவது அபாண்டம்!

**'குறைகள் கூறும் சம்மேளனத் தலைவர்கள் சந்தை வியாபாரத்தில் ஈடுபடத் தயாரா?' என்ற தலைப்பில் கடந்த 29.04.2003 உதயனில் 'கமமும் புலமும்' பகுதியில் வெளியான கட்டுரை தொடர்பாக உடுவில் கமநல கேந்திர நிலைய விவசாயிகள் சம்மேளனங்களின் சமாசம் விடுத்த அறிக்கை இங்கு பிரசுரமாகின்றது.**

29.04.2003ஆம் திகதி திங்கட்கிழமை உதயன் பத்திரிகையில் 'கமமும் புலமும்' என்ற பகுதியில் வெளியான கட்டுரையில் மருதனார்மடம் சந்தை வியாபாரிகளான பொ.ஆசைத்தம்பி, கே.இராசன், ரி.ஜீவதாசன், சி.பாக்கியநாதன் குத்தகைக்காரரான செ.இலகுநாதன் ஆகியோருடனான கலந்துரையாடல் மூலம் பெற்ற தகவல்களைக் கொண்டு நீண்டதொரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளதை விவசாயப் பெருமக்களால் ஏகோபித்த தெரிவில் தெரிவு செய்யப்பட்ட விவசாய சம்மேளனங்களின் சமாச உறுப்பினர்களாகிய நாம் மிகவும் கவலை அடைவதோடு, இத் தலைப்புக் கட்டுரை சம்பந்தமாகச் சம்பந்தப்பட்டவர்களுக்கு சில விளக்கங்கள் கொடுக்கப்பட வேண்டியது எமது கடமைகளில் ஒன்று எனக் கருதுகிறோம்.

இக்கட்டுரையில் பிரசுரித்த விடயங்கள் திட்டமிட்டு வேண்டுமென்று சம்மேளனத் தலைவர்களையும், ஏன் விவசாயப் பெருமக்களின் தாராள மனப்பாண்புச் சேவையை நசுக்கும் செயலாகும்.

விவசாய சம்மேளனங்கள் கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரின் பணிப்பின் பேரில், கமநல சேவைகள் திணைக்கள பெரும்பாக உத்தியோகத்தரின் அனுசரணையுடன், அந்தப்பகுதி கிராம அலுவலர்கள் முன்னிலையில், விவசாயிகளின் மத்தியில் அமைக்கப்பட்டவை. இப்படியாக அமைக்கப்பட்ட அமைப்புதான் விவசாய சம்மேளனங்கள்.

விவசாய சம்மேளனத்தில் ஏனைய சங்கங்கள்போல தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகக் குழு என்பன விவசாயப் பெருமக்களால் தெரிவுசெய்யப்படுகின்றன. இவர்கள் எந்தவித வேதனங்களும் இன்றி விவசாயப் பெருமக்களின் தேவைகளை இயன்றவரை சம்பந்தப்பட்ட அமைப்புகளுடன் தொடர்புகொண்டு ஈடுசெய்வதுடன் அரச அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்குமிடையில் ஓர் இணைப்பாளராக சேவை புரிகின்றனர். இந் நிலைமையில், சந்தையில் விவசாயிகளினால் விற்பதற்காக கொண்டு செல்லப்படும் பொருள்களுக்கு நிகழ்கின்ற அட்டூழியங்களைக் கண்டு சம்மேளனத் தலைவர்கள் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம், மாவட்ட விவசாயிகள் குழுக் கூட்டம், பிரதேச சபைக் கலந்துரையாடல் போன்ற கூட்டங்களில் கலந்து தெரிவிக்கும் போது அவ்வப்போது இவைகளை நிவர்த்தி செய்வதாகக் கூறுகின்றார்கள். ஆனால், சில விடயங்களைத் தவிர அநேகமான பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு கிடைக்கவில்லை. கொள்ளை இலாபம் ஈட்டும் பல வியாபாரிகள் விவசாயிகள்மேல் அபாண்டமான பழிகளைச் சொல்லியிருக்கின்றனர்.

1.பொருள்களில் கலப்படம்

2.பாரமான பெட்டிகளில் பொருள்களைக் கொண்டு வருதல்.

3.நிறைக்காக தண்ணீர் ஊற்றுதல்.

மேற்குறிப்பிட்ட காரணங்களுக்காகதான் 10:1 என்ற கழிவு கழிக்கிறார்களாம். நமது பகுதியில் பாவனையாளர் சட்டவிதிகள் இருந்தும் அதனை நடைமுறைப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வருகிறார்கள் இல்லை. தாம் நினைத்தபடி குறைந்த விலைக்குப் பொருள்களை வாங்கி ஈனஇரக்கமில்லாமல் கூட்டி விற்கும் வியாபாரிகளைக் கேட்போர் யாரும் இல்லை. இப்படிப்பட்ட செயலினால் பாதிக்கப்படுபவர்கள் உற்பத்தியாளர்களும் பாவனையாளர்களும்தான்.

# ஆசிரியர் சம்பள ஏற்றம் புதிய நடைமுறையின் கீழ்

வலிகாமம் தெற்கு,மே14

ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள ஏற்றம் வழங்குவதில் இவ்வருடம் முதல் புதிய நடைமுறை செயற்படுத்தப்பட உள்ளது.

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு புதிய சம்பள ஏற்ற நடைமுறை குறித்து வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாக பாடசாலை அதிபர்களுக்கு அறியப்படுத்தியுள்ளது.

புதிய நடைமுறை இவ்வருடம் முதல் செயற்படுத்தப்படும் எனவும்- இவ்வருடம் ஜனவரி மாதத்தில் இருந்து ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு ஆவணங்களின் அடிப்படையிலேயே ஆசிரியர்களின் வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படும் எனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக இவ்வருடத்துக்குரிய சம்பள அதிகரிப்பு விண்ணப்பப் படிவங்களுடன் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் 2002ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் செயலாற்றுகைத் தரங்கணிப்பு படிவங்களையும் இணைந்து சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-152)






செலான் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் ஒருவருட நிறைவு நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காக செலான் வங்கியின் பொது முகாமையாளர் திருமதி ரோகினி நாணயக்கார யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார். நேற்று மாலை யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் பத்திரிகையாளர்களுடனான சந்திப்பொன்றை அவர் நிகழ்த்தினார். அப்போது எடுக்கப்பட்ட படம் இது. முதலாவது படத்தில் திருமதி ரோகினி நாணயக்காரவுடன் கொழும்பிலிருந்து வருகைதந்த உதவிப் பொதுமுகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் பிராந்திய முகாமையாளர் ஆகியோரும் காணப்படுகின்றனர். நிகழ்வில் செலான் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் கே.கனகசிங்கம் உரை நிகழ்த்துவதை மற்றைய படத்திலும் காணலாம். *(படங்கள் : ரமா)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மதிவதனியின் தேசிய அடையாள அட்டை (இல.778210045V), விசேட அடையாள அட்டை என்பன யாழ் பஸ் நிலையத்துக்கும், கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புகையிரத வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் அல்லது T.P. 021-222-2983 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17919)

### காணி விற்பனைக்கு

கரவெட்டி, கன்பொல்லை வீதியில் நல்ல நிலையில் உள்ள 51/2 பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. அத்துடன், வேறு வேறான இரு தோட்ட நிலங்கள் 51/2 பரப்பு, 1.8 பரப்பு முறையே நவிண்டில், நெல்லியடியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.குமாரசாமி (பூமா) சாமியன், அரசடி வீதி, யூனியன் லேன், கரவெட்டி. (17948)

### இறைச்சிக்கோழி விற்பனை

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக் கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: இல.19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (17945)

### வாடகைக்கு

இல.767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல்ய தனியார் வைத்தியசாலை தொலைபேசி, அற்றாஜ்பாத்துறூம், சவர், சகல தொகுதிககும் மின்விசிறியும் அதே வசதியுடைய ரம்மிய சூழலில் அமைந்த 4 வாகனத் தரிப்பிட வசதிகளுடனான பெரிய வீடும் 3 கடைத்தொகுதிகளும் வாடகைக்கு உண்டு. தொடர்பு நேரில். (17942)

### கீத்தனா பயிற்சி

தமிழ், ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து, தையல், தலை அலங்காரம், கேக் ஐசிங், பெயின்றிங், பூவேலை ஆகிய புதிய வகுப்புகள் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இதற்கு, முன்னதாக அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும். தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: டச்றோட், உடுவில், ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (சி-27901)

### மணமகள் தேவை

1976ஆம் ஆண்டு, அவிட்டம், செவ்வாய் குற்றமற்ற, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற, தொழில்புரியும், இந்து கௌரவ குடும்ப மணமகனுக்கு சிவந்த, அழகான, படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்ககப்படவில்லை. ஜாதகம் புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும்.) தொடர்பு: வி.இல.1889, மே/பா உதயன்.(17953)

### விற்பனை

நல்ல நிலையில் உள்ள யமகா Made 50 (சிவப்பு நிறம்) விற்பனைககுண்டு. தொடர்பு: T.சபேசன், 101/1, ஓட்டுமட வீதி, யாழ்ப்பாணம்.(17932)

Sony, National T.V. 14", 19", 20", 21", 25" வரையான T.V.க்கள், டெக், றேடியோ என்பன சிங்கப்பூரிலிருந்து தருவிக்கப்பட்டு மலிவான விலையில் விற்பனைக்குண்டு. (ஒறியினல் ஜப்பான்) தொடர்பு: 150, K.K.S. Road, Jaffna. (17936)

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

காவலுக்குரிய Dobermann Pincher, Great Dane, Dachund நாய்க்குட்டிகள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), இல.19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (17946)

## சிறுவன் காயம்!

யாழ்ப்பாணம்,மே14

குப்பையை எரித்தபோது அதனுள் இருந்து வெடித்த மர்மப் பொருளினால் காயமடைந்த சிறுவன் ஒருவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

அரியாலை, முள்ளியைச் சேர்ந்த மேஜஸ் ஜென்கோல் (வயது15) என்ற சிறுவனே காயமடைந்தான்.(ஐ-10-15)

## தமிழ்நாட்டு பேச்சாளர்கள் உரை

யாழ்ப்பாணம்,மே14

இரண்டாவது உலக இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்வாக 'வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்கு' எனும் தலைப்பில் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் இன்று மாலை 5.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் சிறப்பு நிகழ்வை நடத்தவுள்ளது.

இதில்தமிழ் நாட்டில் இருந்து வருகைதந்துள்ள பேச்சாளர்களான சுந்தரேசன், மதன் இருவரும் 'வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்கு' எனும் தலைப்பில் உரையாற்றுவர்.

பிற்பகல் 2 மணிக்கு இராஜயோக தியான கண்காட்சி இடம்பெறும்.(ஐரி)

## எமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அரசால் எந்த புனர்வாழ்வு நடவடிக்கையும் இல்லை

### மூதூரில் புலிகளின் திருமலை மகளிர் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் காருண்யா

எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசு எந்தவித புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டுமே உதவிபுரிந்தன. யுத்தகாலத்தில கூட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வன்னியில் உள்ள மக்களுக்கு உதவிகள் புரிந்து வந்துள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் புலிகளின் திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் காருண்யா.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிராந்திய அலுவலகம் சமீபத்தில் மூதூர் கிழக்கில் திறந்து வைக்கப்பட்டது. அந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே காருண்யா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் இங்கு உரையாற்றுகையில்:-

எமது பெண்கள் அபிவிருத்தி நிறுவனம், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து செயற்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இதனூடாக செய்யக்கூடியதாகவிருக்கும் என அவர்கூறினார். இந்த நிகழ்வில் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திலக் நாடாவை வெட்டி தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

மூதூரில் இடம்பெற்ற மோதல்களின் போது உயிரிழந்த ரவிசங்கர், கமலதாசன், ரமணன் ஆகியோரின் குடும்பத்துக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் மாதவராசா வழங்கினார். பெயர்ப் பலகையை நாடாளுமன்ற உறுப்பினர் வ.துரைரட்ணசிங்கம் திரைநீக்கம் செய்து வைத்தார். (ஐ)

### இலங்கை அரசு வடக்கு - கிழக்கு மாகாண சபை
### வடக்கு - கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம்
### தேசியப் போட்டி கூறுவிலை கோரல்

கடன் இல.2880 சீ.இ.
(நிர்மாண வேலைகள்)

**கேள்வி அறிவித்தல் திருத்தமும் திகதி நீடிப்பும்:**

மேற்படி திட்டத்தின் தேசிய போட்டி கூறுவிலை கோரல் சம்பந்தமாக 08.05.2003 பத்திரிகையில் பிரசுரமான கேள்வி அறிவித்தலில் பின்வருமாறு திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

1. ஐ.எவ்.பி.இல. ஜேஎவ் / நீர்ப் / 01
2. பந்தி 03இல் கூறப்பட்ட கேள்விப் பொதிக்கான கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும் திகதி 18.06.2003 பிற்பகல் 3.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
3. பந்தி 05இல் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 20.06.2003 பிற்பகல் 3.00மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது.
4. அட்டவணையில் கேள்வி குறியீட்டு இல.:ஜேஎவ் / நீர்ப் / டிஎஸ்/ 01.

ஒப்பம்: செ.பத்மநாதன்
அரச அதிபர்,
மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
(சி-27904)

### தேவை

வெல்டிங் வேலைக்கும், கம்மாலை வேலைக்கும் ஆள்கள் உடன்தேவை.

தொடர்பு:
**M.T.K. வேக்சொப்**
40,றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
(I.C.R.C இற்கு முன்பாக)
(17952)

### நல்வாழ்த்துக்கள்

யாழ். ஆயர்
**அதிவந்தனைக்குரிய தோமஸ்சவுந்தரநாயகம்**
ஆண்டகை அவர்களால் இன்று யாழ். மறை மாவட்டத்தின் புதிய குரவர்களாக அபிஷேகம் செய்யப்படும்



பத்து அருட்தந்தையர்களும் இறைசேவையில் நற்பணிபுரிய எமது நல்வாழ்த்துக்கள்.

ஞா.பிறகேஸ்வரன் குடும்பத்தினர்
லைவ் ஸ்ருடியோ,
இல.09, 4ஆம் குறுக்குத்தெரு,
(O.L.R. தேவாலயம் முன்பாக), யாழ்ப்பாணம்.
T.P. 0777-570400

வண.யோசவ்வாஸ் வீதி,
சில்லாலை.
(17943)

### நீளும் நினைவுகளூடே உமைப்பிரிந்த பதினெட்டாம் ஆண்டு நிறைவு நாளில் 'அம்மா' நாம் அஞ்சலிக்கின்றோம்

15 - 06 - 1914



02 - 05 - 1985

வேலணை
திருமதி **உருக்குமணி இராசரத்தினம்** (ஆசிரியை)

அஞ்சலிப்போர்:
வைத்தியகலாநிதி சி.இராசரத்தினம் ஜே.பி
(ஓய்வுபெற்ற அதிபர்),
வழித்தோன்றல்கள்: அவர்தம் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

121, இரண்டாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(17947)

### 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

எமது சக ஆசிரிய மாணவி
**செல்வி வானதி**
அவர்களின் அன்புத் தந்தையா
**கந்தையா கனகசபாபதி**

அவர்கள் 14.04.2003 அன்று காலமாகிவிட்டார். அன்னாரது மறைவு குறித்து பிரிவுத்துயரால் வருந்தும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆங்கில நெறி முதலாம் வருட ஆசிரிய மாணவர்கள்.
பலாலி ஆசிரியர் கலாசாலை.
(17949)

### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## அமரர் செல்லத்துரை நடராசா

(ஐயனார் வீதி, கட்டுவன்)
ஓய்வுபெற்ற ஆசிரியர் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை)

அன்னை மடியில் 28.09.1923 — ஆண்டவன் அடியில் 15.04.2003

எமது குடும்பத் தலைவரின் பிரிவுத்துயரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத தெரிவித்துக்கொள்கின்றோம்.

நாளை (15.05.2003) வியாழக்கிழமை எமது கல்வியங்காட்டு இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு.
(17944)
மனைவி, மக்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி மயில்வாகனம் நாகபூரணம்

(பொஸ்கோ ஆட்ரோன் பிறின்டேர்ஸ் உரிமையாளரின் தாயார்)

இல.252, பருத்தித்துறை வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி மயில்வாகனம் நாகபூரணம் 12.05.2003 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய முருகேசு தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும் பீதாம்பரம் (Superme கடை உரிமையாளர், கொழும்பு), புவனேஸ்வரி, காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் பாலசுப்பிரமணியம், சிவச்சந்திரபோஸ் (போஸ்கோ உரிமையாளர்), உதயகுமாரி, மனோரஞ்சிதமலர் (வைத்தியர் - வடமராட்சி பிரதேசசபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராணி (கனடா), சிதம்பரப்பிள்ளை, யோகரட்ணம், ஜசிந்தா, கலைவாணி, அழகர்சாமி, கணேசலிங்கம் (தமிழ்ப்பூங்கா அச்சகம், நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமியாரும் பீ.ஆனந்தகுமார் (சுவிஸ்), பீ.நீரா (கனடா), பீ.சிசீலியா (கனடா), மதிவதனன் (இந்தியா), விஜயச்சந்திரன் மதிவதனி (சுவிஸ்), மணிவண்ணன் சுமதி (உயர்தொழில்நுட்பக் கல்லூரி), சி.மாதினி (யாழ்.பல்கலைக்கழகம், நான்காம் வருடம் பொருளியல்), யோ.துளசி, மதன்-விஜி (குகன் ஸ்ரோர்ஸ்), பா.அருண் (யாழ். பல்கலைக்கழகம் வணிகப்பிரிவு) பா.நிரஞ்சன் (Ceylon Cold Store Ltd.), M.S.பார்த்தீபன், M.S.அருச்சுனா, M.S.தமிழினி, M.S.கௌதமன், அ.விசாகன் அ.கௌசிகன் ஆகியோரின் பேர்த்தியும் ரேஸ்மா (இந்தியா), மதிஸ் (சுவிஸ்), லக்ஷிகா, விதூஷன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (14.05.2003) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணேசலிங்கம் (மருமகன்)
(தமிழ்ப் பூங்கா அச்சகம், நெல்லியடி)

இல: 252, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(C-27899)

யாழ்ப்பாணம் - காரைநகர் சேவையிலீடுபடும்

# பஸ்ஸினுள் தவறவிடப்பட்ட பணம், நகை ஒப்படைப்பு!

## சாரதி, நடத்துநரின் நேர்மைத்திறன்

யாழ்ப்பாணம்,மே14

பஸ்ஸினுள் பயணி ஒருவரால் தவறவிடப்பட்ட மிகப் பெறுமதி வாய்ந்த தங்க நகை மற்றும் பெருந் தொகைப் பணம் அடங்கிய கைப்பையினை அந்த பஸ்ஸின் சாரதியும், நடத்துநரும் மீட்டு உரியவரிடம் ஒப்படைத்துள்ளனர்.

காரைநகரிலிருந்து நேற்றுமுன் தினம் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்த வட பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸிலேயே இவ்வாறு நகை மற்றும் பணத் தொகை என்பன தவறவிடப்பட்டிருந்தன.

தமது பஸ்ஸினுள் தவறவிடப்பட்டிருந்த தங்க நகை அடங்கிய கைப்பையை அவதானித்த சாரதி மற்றும் நடத்துநர், அக்கைப்பையை கோண்டாவில் டிப்போவில் ஒப்படைத்திருந்தனர்.

மறுநாளான தனது பொதியைத் தேடிவந்த பயணியிடம் தங்கநகை மற்றும் பணத்தொகை என்பன ஒப்படைக்கப்பட்டன.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதியைச் சேர்ந்த பஸ்ஸின் சாரதி தம்பையாபிள்ளை ஸ்ரீஸ்கந்தராசா மற்றும் மானிப்பாய் தெற்கைச் சேர்ந்த நடத்துநர் சின்னப்பு கிறிஸ்ரியன் நிர்மலராஜ் ஆகிய இருவரது நேர்மைத் திறனைப் பயணிகள் மற்றும் போக்குவரத்துச் சபை அதிகாரிகள் பாராட்டியுள்ளனர். (எ-9)

# வழுக்கியாற்று வாய்க்காலை உடன் புனரமைத்துத் தருக!

## பிரதேச செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மே14

சங்குவேலி, அந்திரான் போன்ற இடங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கைத் தடுப்பதற்கு வழுக்கியாற்று வாய்க்காலை விரைவில் புனரமைத்துத் தருமாறு சங்குவேலி பகுதி கிராம சேவையாளர் வலிகாமம் தெற்கு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வழுக்கியாற்று வாய்க்கால் திருத்தம் செய்யப்படாமையால் சங்குவேலி, அந்திரான் போன்ற இடங்களில் மழைக் காலங்களில் வெள்ளம் வீதிகளில் தேங்கி நிற்பதாகவும் -

நீர் தேங்கி நில்லாது வடிந்தோடுவதற்காக மக்கள் வீதிகளைக் குறுக்கே வெட்டிவிடுவதாகவும், இதனால் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுவதாகவும் - கிராமசேவையாளர் தமது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவற்றைத் தடுப்பதற்கும், வெள்ளம் இலகுவாக வடிந்தோடுவதற்கும் வசதியாக வழுக்கியாற்று வாய்க்கால் பகுதியை அவசரமாகப் புனரமைப்புச் செய்யுமாறும் -

இதனால் இப்பகுதி மக்கள் பெரும் நன்மையடைவார்கள் என்றும் - கிராம சேவையாளர் ஞா.பெ.ஜெபரத்தினம் சம்பந்தப்பட்ட கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார். (எ-152)

## இரண்டாம் வருட நினைவஞ்சலி



தோற்றம் 14 - 09 - 1947

மறைவு 14 - 05 - 2001

### அமரர் சின்னன் தம்பிப்பிள்ளை

*(யாழ்.செயலக அலுவலகப் பணியாளர்)*

(14.05.2003)

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
ஆண்டுகள் இரண்டு கழிந்தாலும் - உமது
நினைவுகள் என்றும் எம்மைவிட்டு நீங்காது!

*இராசசிங்கம் வீதி,*
*திருநகர், யாழ்ப்பாணம்.*
(17898)
சி.நல்லதம்பி (சகோதரர்),
மகன் சசிகுமார் குடும்பத்தினர்.

## நினைவலைகள்

### 3ஆம் ஆண்டு 6ஆம் மாதம்





திருமதி
சரவணமுத்து அன்னப்பிள்ளை

அமரர்
குமாரவேலு குகனேசன்

01.01.1901 ← மலர்வு → 26.06.1962
14.05.2000 ← உதிர்வு → 10.10.2002

**என்றும் உங்கள் நினைவுகளுடன்:**

*மடத்தடி வீதி,*
*சாவகச்சேரி.*
(17096) **அன்பு உள்ளங்கள்.**

### வலி.தெற்கில் வீதிகளைப் புனரமைக்க நிதி ஒதுக்கீடு

வலி.தெற்கு,மே14

வலிகாமம் தெற்கு பிரதேச சபையினால் இவ்வடரும் இரண்டு பிரதான வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கும் ஒரு வீதிக்கு மின்சாரம் வழங்குவதற்கும் தேவையான நிதி ஒதுக்கீட்டுக்கான அங்கீகாரம் உரிய திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் பிரகாரம் புன்னாலைக் கட்டுவன் ஐயனார் வீதி, உடுவில் பட்டியோலை வீதி என்பன புனரமைப்பு செய்யப்படவுள்ளன. புன்னாலைக் கட்டுவன் மத்தாளோடை வீதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (எ-152)

### அமைதிக்கான கலை விழா

யாழ்ப்பாணம்,மே14

திருமறைக்கலாமன்றம் நடத்தும் மூவினக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் 'அமைதிக்கான நிகழ்வுகள்' கலை விழா இன்று புதன்கிழமை முதல் மூன்று தினங்களுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணி முதல் இரவு 11.30 மணிவரை இந்த விழா இடம்பெறும். இதில் யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கின்றார்.

கலை நிகழ்வாக சிங்கள நாடகங்கள், புரட்சிப் பறவைகள் அமைப்பின் 'கரைதேடும் ஓடங்கள்' எனும் தமிழ் நாடகம், பேராசிரியர் எதிர்வீர சரத்சந்திராவின் 'சிங்கபாகு' சிங்கள நாடகம், மிராண்டா ஹேமலதாவின் மாணவிகள் வழங்கும் சிங்களப் பாரம்பரிய நடனங்கள் ஆகியன இடம்பெறும். (எ-ரி)

### அகதிகளை பதிவுசெய்ய நடவடிக்கை

அராலி,மே14

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக இங்கிருந்து இடம்பெயர்ந்து இந்தியா சென்று வசித்து வந்தவர்கள் பலர் தற்போதைய சமாதான சூழ்நிலை காரணமாக மீளவும் தாயகம் திரும்பியுள்ளார்கள்.

இவ்வாறு தாயகம் திரும்பியுள்ளவர்களின் விவரங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் பதிவுசெய்து வருகின்றனர். இவ்வாறு மீளத்திரும்பியவர்கள் கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்துடன் நேரில் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-14)

### ஆலய சேதம் மதிப்பீடு

யாழ்ப்பாணம்,மே14

நவாலி தேவாலயம் மீதான குண்டுத் தாக்குதலில் (09.07.1995) முற்றாக அழிந்த நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் ஆலய மீள்புனரமைப்புக்கு 23 லட்சம் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையின்போது நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் தாக்கப்பட்ட போது அதற்கு முன்புறமாக - பிரதான வீதியில் இருந்த சின்ன கதிர்காமம் என அழைக்கப்படும் ஸ்ரீகதிர்காம முருகன் ஆலயம் முற்றாக அழிவடைந்தது. மேற்படி ஆலய புனரமைப்புக்காக எந்த நிதி ஒதுக்கீடும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (ஐ-185)

### மீனவர்கள் விசனம்

கொழும்புத்துறை,மே14

பாஷையூர் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் மீனவர்கள் தமது தொழில் செயற்பாடுகள் முடிவுற்றதும் நள்ளிரவுக்குப் பின் கரை திரும்ப படையினர் அனுமதிக்காமையினால் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

மாலையில் கடலுக்குச் செல்லும் தாம் நள்ளிரவுடன் தமது தொழிற்பாடுகளை முடித்து விடுவதாகவும் உடனடியாக கரை திரும்ப அனுமதி இல்லாததினால் இரவுப் பொழுதை பெரும் காற்றிலும், மழையிலும் கழிக்க வேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

காலை 6மணிக்கே கரை திரும்ப அனுமதிக்கப்படுவதால் பல மணி நேரங்களை தேவையின்றி கடலில் போக்கவேண்டி உள்ளதென அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ-30)

# லொத்தர் சபைச் சர்ச்சையை பேசித் தீர்ப்பதே சரியான வழி

## ஐ.தே.க. ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,மே14

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதால் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலையைப் பேச்சுகள்மூலம் தீர்ப்பதே சரியானது. தற்போதைய நிலைமையைச் சீர்செய்வதற்கு அதுவே சிறந்த வழி.


- இப்படிக் கூறியிருக்கிறார் ஐ.தே.கவின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணா திலக.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஒருதலைப்பட்சமாக ஜனாதிபதி லொத்தர் சபையைப் பொறுப்பேற்றதனால் பிணக்கு எழுந்திருக்கின்றது. 1994 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த சந்திரிகா குமாரதுங்க அப்போதைய ஜனாதிபதி டி.பி.விஜயதுங்க தலைமையில் 'சகவாழ்வு' என்ற அரசியல் கொள்கையை பின்பற்றினார். பிரதமராக இருந்த சந்திரிகா குமாரதுங்கவுடன் ஜனாதிபதி விஜயதுங்க, பரஸ்பர இணக்கப்பாட்டின் பேரில் அமைச்சர்களின் அதிகாரங்களைத் தீர்மானிக்கும் கொள்கையைப் பின்பற்றினார்.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. அப்போது ஜனாதிபதியும், பிரதமரும் சகவாழ்வு அரசியல் முறையைத்தான் கடைப்பிடித்து வந்தார்கள். இனிமேலும் இந்தக்கொள்கையை முன்னெடுத்துச்செல்வது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் - என்றுள்ளது.

## வாழ்த்தி மகிழ்கின்றோம்



**இரண்டாவது உலக இந்து மாநாட்டைச் சிறப்புற நடத்தி "மேன்மை கொள் சைவநீதியை உலகெலாம் விளங்கச் செய்த" இந்து கலாசார அமைச்சின் மாண்பு மிகு பணி தமிழுக்கும் இந்து சமயத்திற்கும் மேன் மேலும் தொடர வேண்டுமென எல்லாம்வல்ல இறைவனை வணங்கி வேண்டுகிறோம்**

*கோவிற்கடவை,*
*துன்னாலை மத்தி.*
*கரவெட்டி.*
(17917)
சனசமூக நிலைய நிர்வாகிகளும்,
ஊர்மக்களும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 19 - 11 - 1934

உதிர்வு 14 - 04 - 2003

### திருமதி இலட்சுமி அம்மாள் சிவயோகநாதன்

ஆனதோ முப்பத்தொன்று அந்தோ நீர் மறைந்து
ஆத்மா சாந்திஅடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14.05.2003) புதன்கிழமை நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*"இரத்தின வாசா"*
*கைதடி வடக்கு,*
*கைதடி.*
(17886)
**- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து நவரட்ணம்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
பிரதேச சபை, சாவகச்சேரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உடுவில், செபமாலை மாதா கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து நவரட்ணம் நேற்றுமுன் தினம் (12.05.2003) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்து - மாரியம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற சின்னப்பு - இராசம்மா தம்பதியரின் மருமகனும் எமிலியின் அன்புக் கணவரும் ஜெயகாந்தன் (பிரான்ஸ்), அனெஸ்லி ரவிக்காந்தன் (முதலாம் வருடம், விஞ்ஞானபீடம்), செரின் சர்மிளா (2ஆம் வருடம், கலைப் பீடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் டன்சியின் (பிரான்ஸ்) மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், பொன்னுத்துரை, கந்தையா, ஐயாத்துரை, நடராஜா மற்றும் அப்புத்துரை, அன்னம்மா, சரஸ்வதி, மகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், வின்சன், பிலோமினா, லில்லி மற்றும் தவமணி, பெனடிற், அல்பிரட், அருளம்மா, ஆகத்தா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (15.05.2003) வியாழக்கிழமை காலை 10.00மணிக்கு உடுவில் செபமாலை மாதா ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மல்வத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அம்பலவாணர் வீதி,*
*உடுவில்.*
(17929)
தகவல்: மனைவி எமிலி,
பிள்ளைகள்.

# யாழ்.மக்கள் தங்கள் நீர்வளம் தொடர்பாக 'சீரியஸாக' சிந்திக்கும் நிலை வந்துவிட்டது!

பூமியில் உள்ள நீரில் 97.5 வீதம் கடல் நீராகவே உள்ளது. எஞ்சிய நீரிலும் பெரும் பகுதி கைக்கெட்டாத வெகு ஆழத்திலுள்ள நிலத்தடி நீராகவும், பனிப்பாறைகளாகவும் சிறைப்பட்டிருக்கிறது. மீதி 0.26 வீதம் நீர் மாத்திரமே இலகுவில் கிடைக்கக்கூடிய நீராக உள்ளது. இது பூமியிலுள்ள மொத்த நீரில் 0.007 வீதமாகும்.இந்த சொற்ப அளவு நீருக்கும் ஆபத்து என்பதுதான் இன்றுள்ள பிரச்சினை என்று நீர் வளங்களை உலகளாவிய ரீதியில் மதிப்பீடு செய்து வரும் ஐ.நா. கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனம் புள்ளி விபரங்களுடன் அறிவித்துள்ளது.



சகல மனிதர்களுக்கும், அவர்களது உயிர் வாழ்க்கைக்கு நீர் மிகவும் அத்தியாவசியமானது. சராசரியாக ஒரு மனிதனுக்கு தினமொன்றுக்கு 20 லீற்றர் நீர் தேவையான நிலையில் இருக்கின்றான். ஆனால், உலகின பல இடங்களிலும், ஏன் இலங்கையிலும் சில பாகங்களில் வாழும் மனிதர்கள் இந்த நீரைப் பெற்றுக்கொள்ள படாத பாடுபட வேண்டி இருப்பதை அவதானிக்கக் கூடியதாய் உள்ளது. அதிகரித்து வரும் நீர்ப்பிரச்சினையால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும் பிள்ளைகளுமே. தினமும் 10-15 கிலோ மீற்றர் தூரம் வரை நடந்து சென்று நீரைச் சேகரித்து சுமந்து வந்து தமது அன்றாடத் தேவைகளுக்கு பயன்படுத்தவேண்டிய துன்ப நிலையை அனுபவித்து வருகிறார்கள். இது வேறு எங்குமல்ல, யாழ்குடா நாட்டிலேயே காணக் கூடியதாய் உள்ளது.

யுத்தம் காரணமாக கடந்த இரு தசாப்தங்களாக யாழ். குடாநாட்டு மக்கள் சந்தித்துள்ள பேரழிவுகளில் மனித வளமும், நீர் வளமும், வனவளமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. ஒரு மாநிலத்தின் வளர்ச்சிக்கும், வளத்திற்கும் அதன் 1/3 பங்கு நிலமாவது வனவளமாகப் பேணப்படவேண்டும். இந்த உண்மையும் தேவையும் யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத் தமட்டில் இன்று உணரப்படாத விடயங்களாகிவிட்டன.

ஆதிகாலத்தில் வாழ்ந்த மக்கள் யாழ்.குடாநாட்டை வனவளமும், நீர் வளமும் மிக்க பூமியாகவே கட்டிக் காத்து வளர்த்துள்ளனர். குடாநாட்டின மழை வீழ்ச்சிக்கும், உணவுத் தேவைகளுக்கும் அக்காலத்து மக்கள் பனை வளத்தைப் பேணிப் பாதுகாத்து வந்துள்ளனர். விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படாத நிலங்களில் பனந்தோப்புக்களை உருவாக்கினர். இவற்றை அவர்கள் தமது சொந்த நலனுக்காகவன்றி எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதியே செய்தனர். சுருங்கக் கூறின் பணைக்காலை யாழ்குடாநாடு வனவளம் நிரம்பிய பூமியாகவே விளங்கியது. இந்த யுத்தம் காரணமாக குடா நாட்டில் மாத்திரம் சுமார் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்பதை புள்ளி விபரங்களினூடாக அறியக்கூடியதாய் உள்ளது. இவை போதாதென்று கற்குவியல்களாக காட்சியளிக்கும் இன்றைய யாழ்.குடாநாட்டில் மீதியாக இருக்கும் பயன்தரு மரங்களெல்லாம் விறகுத் தேவைக்காக கண்மூடித்தனமாக வெட்டி அழிக்கப்படுகின்றன. யாழ். குடாநாடு வளம் பெறவேண்டுமாயின் ஏற்கனவே இழந்து போயுள்ள மரவளத்தை மீட்டெடுக்குமுகமாக பல்வேறு மரக்கன்றுகளை நட்டு வளர்க்கவேண்டும். எதிர்கால சந்ததியினரின் நன்மை கருதி இவ்வாறான புதிய மரங்களை நட்டு குடாநாட்டின் மரவளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய கடமை யாழ்குடாநாட்டு மக்களையே சாரும். இது முழுக்கமுழுக்க யாழ்குடாநாட்டு மக்களைப் பொறுத்த விடயமேயன்றி அரச செயற்பாடுகளையோ. அரச சார்பற்ற நிறுவனங்களையோ நம்பியிருக்கும் கருமமல்ல.

யாழ்குடாநாட்டின் வனவளத்துடன் நீர்வளத்தையும் பெரிதும் கவனத்திற் கொள்ளவேண்டும். எமது முன்னோர் வனவளத்துடன், நீர்வளத்தையும் பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர். அவர்கள் மழை நீரை சேமிக்கும் முகமாக பேணிய பல நூறு சிறுசிறு குளங்களும், நீர்த்தேக்கங்களும் இன்று தூர்ந்து போயுள்ளன. அக்காலத்து மக்கள் கூடியளவு மழை நீரைச் சேமித்து எமது பிரதேசத்தின் நன்னீர் வளத்தைப் பெருக்கினர். இன்றோ பல நீர்த்தேக்கங்கள் தூர்ந்து விவசாய நிலங்களாகவும், குடியிருப்புப் பகுதிகளாகவும் மாறியுள்ளன.

உதாரணமாக 6-7 தசாப்தங்களுக்குமுன் கொக்குவில், கோண்டாவில் கிராமங்களின் நடுவில் உள்ள "நந்தாவில்" குளம் வருடாவருடம் நிரம்பி வெள்ளப் பெருக்கேற்பட்டு காங்கேசன்துறை வீதியை மேவி வெள்ளம் பாய்வதுண்டு. மாரிகாலம் முடிந்த பின்பும் பல மாதங்களாக இக்குளத்தின் வெள்ளம் அலை மோதிக்கொண்டிருக்கும். இப்போதெல்லாம் அப்படியில்லை. இதற்கு மாரி மழை பொய்த்துப்போனது ஒரு காரணம். மற்றையது நந்தாவிலை நோக்கிச் செல்லும் வெள்ள வாய்க்கால்களும், அவற்றுடன் இணைந்த மதகுகளும் தூர்ந்து போனமையே அடுத்த காரணமாகும். சித்திரை மாரி என்ற வழமை யாழ்குடாநாட்டில் நூற்றாண்டு காலமாக நிலவி வந்துள்ளது. சித்திரை மாரியால் பல குளங்கள் நிறைந்து வெள்ளப் பெருக்கேற்பட்டு மக்கள் இடம்பெயர்வதுமுண்டு.

## சித்திரை மாரி இங்கு பொய்த்துப் போனதேன்?

இன்று சித்திரை மாரி பொய்த்துப் போகக் காரணம், காடுகளும், மரங்களும் அழிய அழிய மழை வீழ்ச்சியும் பொய்த்துவிட்டது. இன்று எமக்கிருக்கக்கூடிய நன்னீர்த் தேக்கங்களைக் கூட நாம் பாதுகாக்கத் தவறிவிடுகின்றோம்.

### கிணறுகளுக்குப் பாதிப்பு

கடந்த 20 வருடகாலப் போரினால் குடாநாட்டில் நீர்வளச்சபை, நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை போன்றவற்றின் பணிகள் ஸ்தம்பித நிலையிலேயே உள்ளன. இதன் காரணமாக குடாநாட்டைச் சூழ உள்ள உவர்நீர் சரியான காப்புத் திட்டங்கள் இல்லாமையினால் நிலத்தடி நீருடன் பெருமளவில் கலந்துகொள்கிறது. இதற்கு முக்கிய காரணம் நன்னீர்க் கால்வாய்கள் நேரடியாக கடல நீருடன் போய்ச் சேருகிறது. அடுத்தது, மழைநீரைத்தேக்கி வைக்கும் குளங்கள் எதுவும் புனரமைப்புச் செய்யப்படாமையும், கடல் பகுதிக்கும் தரைப்பகுதிக்குமான கடல் நீர்த் தடுப்பு அணைகள் எதுவுமில்லாமையுமே. இதன் காரணமாக யாழ்.குடாநாட்டிலுள்ள ஏறத்தாழ ஒரு லட்சம் கிணறுகளும் காலப்போக்கில் உவர்த தன்மையுடைய நீராக மாறக்கூடிய வாய்ப்புள்ளது.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக குடாநாட்டிற்குள் அரச படைகளினால் பல்வேறுவகையான ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல தொன் எடையுள்ள ஏராளமான குண்டுகள் பொழியப்பட்டிருக்கின்றன. உயிர்களுக்கும் மோசமான பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய நச்சு இரசாயனச் சேர்க்கைகள் இவற்றுள் அடங்கியுள்ளன. இப்படிப் பயன்படுத்தப்பட்ட வெடி பொருள்களின் மிஞ்சிய நச்சுப் படிவங்கள் பெருமளவில் நீருடன் சேர்ந்து அவை பின் நிலத்தடி நீருடன் சேர்ந்துள்ளமை பெரும் பிரச்சினையாக உள்ளது. இதில் வந்து சேரும் இரசம்(Hg), கட்மியம்(Cd), குறோமியம்(Cr), ஈயம்(Pb), சயனைட்(Cw), நைத்திரேற் (No3) போன்ற இரசாயனப் பொருள்களும் நீரைப் பாவனைக்கு உகந்ததல்லதாக்கி விடுகின்றன. ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போல் இரசத்தில் ஒரு மில்லி கிராமில் ஆயிரத்தில் ஒரு பங்கு, ஒரு லீற்றர் நீரை நச்சாக்கப் போதுமானதாகும் என்று உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. இவை குடிதண்ணீர் ஆதாரங்களை நச்சு வலயத்தில் தள்ளுகின்றன.

மேலும், கடந்த காலப் போர் அனர்த்தம் காரணமாக அளவு கணக்கின்றி கண்டகண்ட இடங்களில் கிடங்கு வெட்டிப் புதைக்கப்பட்ட சடலங்கள் உக்கி நிலத்தடி நீருடன் கலந்துள்ளன. மற்றும் கால்வாய்களிலும், குளங்களிலும் குப்பைகள் கொட்டப்பட்டிருப்பதும் தரைக்கீழ் நீரை மாசடையச் செய்துள்ளது. யாழ் மாநகர சபையே பல குளங்களைக் குப்பை கொண்டு நிரவும் கைங்கரியத்தைச் செய்து வருகிறது. யாழ். நகர வாசிகளின் கழிவுகள், வைத்தியசாலைக் கழிவுகளால் குடாநாட்டில் குடிநீருக்கு மிகப்பெரும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இவ்வாறு சரியான முறையில் திட்டம் எதுவும் இன்றிக் கழிவுகள் கொட்டப்பட்டு அவை நீருடன் கலந்து நிலத்தடி நீருடன் சேருவதால் நீரில் ஒட்சிசன் ($O_2$) செறிவு குறைந்து அமோனியாவின் ($NH_4$) செறிவு அதிகரிக்கிறது.

போர்ச் சூழ்நிலை காரணமாக யாழ்குடாநாட்டு மக்களின் வாழ்க்கை முறை எதுவித சட்டதிட்டங்களையும் பின்பற்றுவதாக இல்லை. அந்த மட்டில் கால்வாய்கள், வாய்க்கால்கள் எல்லாவற்றிலும் கண்மூடித்தனமாக கழிவு எண்ணெய்கள் ஊற்றப்படுகின்றன. அதேநேரம், வாகனச் சுத்திகரிப்பு நிலையங்களிலிருந்து வெளியேறும் கழிவுகள் நிலக்கீழ் நீரோடு சேர்ந்து கிணறுகளினூடாக எண்ணெய்ப்படை கொண்ட நீரை மக்கள் பாவனைக்கு எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது. இவ்வாறு பல பல காரணங்களால் குடாநாட்டின் குடிதண்ணீர் நிலைகள் மாசுபடுத்தப்பட்டுக் கொண்டே வருகிறது. இப்படியான மாசடைந்த நீரைப் பருகுவதால் குடாநாட்டு மக்கள் சிறிது சிறிதாக நோயாளிகளாக மாறிக் கொண்டே இருக்கிறார்கள்.

இன்று யாழ்.குடாநாட்டில் 1/3 பங்கு மக்களுக்கு பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைப்பதென்பது வெறுங் கானல் நீராகவே உள்ளது. மேலும் அரைவாசிப்பேர் மட்டில் அடிப்படைச் சுகாதார வசதிகள் இன்றித் திண்டாடுகின்றார்கள். முறையான கழிப்பிட வசதிகள், வடிகால் அமைப்புக்கள் இல்லாததால் கழிவுகள் குடிதண்ணீருடன் தடையின்றிக் கலந்துவிடுகின்றன. இவ்வாறு தொற்றுக் கிருமிகள் உள்ள நீர் காரணமாகவே குடாநாட்டின் அரைவாசிப்பேர் மட்டில் வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நீர் சார்பு நோய்களுக்கு ஆளாகின்றார்கள். அதுவும் குறிப்பாக 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளையே பாதிக்கிறது.

குடாநாட்டின் 80 வீதமான நீரை விழுங்கிக் கொண்டிருக்கும் வேளாணமையும் நன்னீர் ஆதாரங்களின் இருப்புக்கு வேட்டு வைப்பதாய் உள்ளது. அக்காலத்து மக்கள் தமது விவசாயத் தேவைகளுக்கு அளவாகவே நீர்ப்பாசனம் செய்தார்கள். இதற்கு அன்றைய நீர்ப்பாய்ச்சும் முறைகளும உகந்தனவாக இருந்தன. இன்றைய நீர்ப்பாசன முறையில் பல ஆயிரக் கணக்கான நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால் நிலத்திற்கடியில் உள்ள நீர் தேவைக்கதிகமாக வெளியேற்றப்பட்டு வீண்விரயம் செய்யப்படுகிறது. விவசாயத்துக்கென வெளியேற்றப்படும் நீரில் 20 விழுக்காடு மட்டுமே பயிர்களைச் சென்றடைகின்றன. மீதி 80 விழுக்காடும் வாய்க்கால்களின் கசிவு, ஆவியாதல் என்று வீணாகிறது. இதில் தேங்கி நின்று ஆவியாகும் இடங்களில் உப்புக்களைத் தேக்கியும் வருகிறது. இப்படி குடாநாட்டின் 20 வீதமான நிலம் இனிமேலும் பயிர்கள் தாங்க முடியாத அளவுக்கு உவர்த் தன்மையாகியுள்ளது. அதேநேரம் யாழ் குடாநாட்டில் தோண்டப்பட்டுள்ள பல நூறு குழாய்க் கிணறுகள் மூலம் நிலத்தின் அடிமட்டத்திலுள்ள நன்னீர் ஊற்றுக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.யாழ். குடாநாட்டு மக்கள் இனிமேலும் குடிதண்ணீர்ப் பிரச்சினைகளுக்கு ஆளாகாமல், நோய்நொடியின்றி வாழவேண்டுமேயாயின், நாட்டில் மழை பெய்வதற்கான காரணங்களை உணர்ந்து அதற்கேற்ற வகையில் இயற்கை வளங்களைப் பேணுவதில் அக்கறை காட்ட வேண்டும்.

**க.இராசேந்திரம்**
*திட்ட உத்தியோகத்தர்*
*பட்டினிக்கெதிரான நிறுவனம் – யாழ்.*

யாழ்குடாநாடு வரண்ட பிரதேசம், வானம் பார்த்த பூமி. அதனால் கோடை காலங்களில் பல பிரதேசங்களில் வழமையாகவும் ஏனைய பிரதேசங்களில் அடிக்கடியும் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுவதுண்டு. மனிதனுக்கு உணவை விடவும் பிரதானமான தேவையாக உள்ளது தண்ணீர். எனவே தண்ணீர்த் தேவையை, முக்கியத்துவத்தை உணர்ந்து, கிடைக்கும் மழைநீரைத் தேக்கவும், குளங்களைத் தோண்டி ஆழமாக்கவும் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்தவும், மரங்களைக் கண்டபடி தறிக்காமல் இருப்பதோடு மட்டுமன்றி அவற்றைப் பேணி வளர்க்கவும் யாழ்.குடாநாட்டில் ஒவ்வொரு பிரஜையும் அக்கறை கொள்ள வேண்டும். இல்லையேல் வருங்கால சந்ததியினர் ஆபிரிக்க நாட்டு மக்களைப் போல் பட்டினியால் வாடுவர். பசியால் சாவார்கள்.

*"விண்ணின்று பொய்ப்பின்*
*விரிநீர் வியனுலகத்து*
*உள்நின்று உடற்றும் பசி"*

என்ற வள்ளுவர் வாக்கு மெய்யாகிவிடும்.


## பதவி வெற்றிடம் - விடுதிக்காப்பாளர்

- ★ கல்வித்தகைமை: பட்டதாரி
- ★ முன் அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கொள்ளப்படும்.
- ★ வயதெல்லை: 35-60
- ★ விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்.
- ★ இல்லப்பிள்ளைகளைப் பரிவோடுகவனிப்பதிலும், சைவாசாரம் பேணுவதிலும், வழிகாட்டுதலிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுதல் வேண்டும்.
- ★ தொண்டுதியம் பேசி நிர்ணயிக்கப்படும்.

அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி: 24.05.2003.

*சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,*
*கலாசாலை வீதி, திருநெல்வேலி.* (C/27910) சோ.பத்மநாதன்,
செயலாளர்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 09 - 07 - 1935



ஆண்டவன் அடியில் 25 - 04 - 2002

அமரர் **துரையப்பா பூபாலசுந்தரம்**

(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்,யாழ்.மாநகரசபை)
அன்புடனும் பண்புடனும் வாழ்ந்தீர்! - இன்று
ஆண்டு ஒன்றாகி விட்டாலும் - என்றும்
உங்கள் நினைவு மட்டும் மாறாது!

உம் நினைவுடன்...
- குடும்பத்தினர்.

*44/8,மணல்தறை லேன்,*
*கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.* (17965)



## மரண அறிவித்தல்

### இளையதம்பி கனகலிங்கம்

(இளைப்பாறிய அதிபர், பலாலி ஆசிரியர் கலாசாலை - முன்னாள் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்)

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், 98, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும், தற்போது 19-14/1, ஸ்ரேசன் றோட், வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி கனகலிங்கம் 13.05.2003 செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கமலாசனி அவர்களின் அன்புக் கணவரும் தர்மினி (கொழும்பு), சுகந்தினி (சிங்கப்பூர்) ஆகியோரின் தந்தையும் சிவசோதி (கொழும்பு), பிரபாகரன் (சிங்கப்பூர்) ஆகியோரின் மாமனாரும் லக்சினி, நிருசினி, கேசிகன், பிரணுகன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கனகாம்பிகை, காலஞ்சென்ற சபாலிங்கம் (இளைப்பாறிய அதிபர், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14.05.2003) புதன்கிழமை காலை 8.00 மணி முதல் ஜயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பி.ப. 2.00 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 4.00 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*151, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*T.P: 01 - 500075* (17967)

தகவல்:
இராஜினி சிவராஜா
(பெறாமகள்)



தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற எழுச்சி விழாவின்போது நாயன்மார்களின் திருவுருவப்படங்களும், திருமுறைப் பதிகத் திரட்டுச்சுவடிகளும் செல்வச்சந்நிதி கோயிலில் இருந்து ஊர்வலமாக எடுத்துவரப்படுவதை முதலாவது படத்திலும் -

செல்வச்சந்நிதி கோயிலில் நடைபெற்ற இந்துசமய எழுச்சி மாநாடு தொடர்பான விசேட பூசையின்போது சந்நிதிகோயில் பூசகர் தெய்வேந்திர ஐயரிடமிருந்து தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த பேராசிரியர் முனைவர் செல்வகணபதி காளாஞ்சி பெறுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படம் : வடமராட்சி செய்தியாளர்)

### தலதா மாளிகைக் குண்டுத் தாக்குதல் வழக்கு:

# சம்பவம் நிகழ்ந்த 11நாள்களின் பின்னரே பொலீஸாருக்கு வாக்குமூலம் அளித்தேன்

## இந்து கலாசார நிலைய முகாமையாளர் சாட்சியம்

கண்டி,மே13

"ஸ்ரீ தலதா மாளிகைக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக பொலீஸாருக்கு சம்பவம் இடம்பெற்ற 11 நாள்களின் பின்னரே வாக்குமூலம் அளித்தேன். எனது வாழ்க்கையில் இந்தச் சம்பவத்தை முக்கிய சம்பவமாகவே கருதுகிறேன்."

- இவ்வாறு கூறினார் கண்டி இந்து கலாசார நிலையத்தின் நிர்வாக முகாமையாளரான வீரபத்திரன் பெரியண்ணன் கருப்பையா (வயது 72).

கண்டி ஸ்ரீ தலதா மாளிகை மீது லொறி ஒன்றில் பொருத்தப்பட்ட குண்டுகளினால் 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி அனர்த்தம் விளைவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையில் முதலாவது சாட்சியாக அழைக்கப்பட்டபொழுதே சாட்சி மேற்கண்டவாறு கூறினார்.

கண்டி மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தொடர்பான ஆரம்ப விசாரணை கடந்த 12ஆம் திகதி ஆரம்பமானது. நீதிபதி டி.என்.ஸி. லேக்கம் வசம் முன்னிலையில் இடம்பெற்ற இந்த விசாரணையின்போது இந்தச் சம்பவத்தின் எதிரியான சுப்பிரமணியம் ரவீந்திரன் தலைமறைவாகி இருப்பதுடன் 2ஆம் எதிரியான எம். சிவராஜா அல்லது மாஸ்டர், 3ஆம் எதிரியான எம்.தர்மலிங்கம், 4ஆம் எதிரியான கே.இராமச்சந்திரன் ஆகிய மூவரும் விளக்கமறியலில் இருந்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

ஸ்ரீதலதா மாளிகை மீது குண்டுகள் மூலம் அனர்த்தம் ஏற்படுத்த உதவி, ஒத்தாசை புரிந்ததாகவும், உடந்தையாக இருந்ததாகவும் 149 குற்றச்சாட்டுகளின் பேரில் எதிரிகளுக்கு எதிராக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

அரசதரப்பு சட்டத்தரணி புவனேகு அலுவிகாரையின் அனுசரணையுடன் சாட்சி கருப்பையா தொடர்ந்தும் கூறியதாவது:

"நான் இந்து கலாசார நிலையத்தில் 1992ஆம் ஆண்டு தொடக்கம் பணிபுரிந்து வருகிறேன். இந்த நிலையத்தில் தங்குமிடம் கோரி வருபவர்கள் அஸ்கிரியாவில் இயங்கும் பொலஸ் பிரிவு அனுமதியுடன் இந்த நிலையத்தில் தங்க அனுமதிக்கப்படுவர். இதன் பொருட்டு தங்கும் அறைகளுக்கும் சாலைக்குமாக கட்டணம் அறவிடப்படும்.

தங்க வருபவர்கள் பற்றிய முழு விவரமும் பதிவேட்டில் பதிவுசெய்யபபடும். இதுபற்றி பொலீஸாருக்கும் அறிவிக்கவேண்டும்.

1997.01.25ஆம் நாள் தலதா மாளிகை, குண்டுகளினால் தாக்கப்பட்ட சம்பவம் நன்கு தெரியும். இதற்கு முன்னர் எவர் இந்த நிலையத்தில் தங்குவதற்கு வந்தாலும் அவர்கள் பற்றிய முழு விவரமும் பதிவேட்டில் இடப்படும். 1998.12.01ஆம் நாள் அன்று எம்.பீ.தர்மலிங்கம் என்பவர் இங்கு தங்குமிடம் கோரி வந்தார். அவர் ஹல்துமுல்ல, கொழும்பு 11 என்ற முகவரியைக் கொடுத்திருந்தார். மற்றவர் எஸ்.ரவீந்திரன், இவரது முகவரி 101, பீஎச்.வீதி, திருகோணமலை என்பதாகும். இவர்கள் தங்குவதற்கான கட்டண பற்றுச்சீட்டும் என்னால் வழங்கப்பட்டது.

இவர்கள் வந்த லொறி இலக்கம் 43/13 என்ற வாகனமும் 40/3396 என்ற இலக்கம் கொண்ட வாகனமும் நிலையத்தில் நிறுத்திவைக்கப்பட்டன. இவர்களின் ஆள் அடையாள அட்டை இலக்கத்தையும் நான் பதிவேட்டில் குறித்துக்கொண்டேன்.

நிலையத்தில் தங்குமிடம்கோரி வருபவர்கள் மறுநாளும் தங்களது பெயர்களைப் புதுப்பிக்கவேண்டியிருந்தது.

மீண்டும் 14.01.1998இல் தங்குமிடம் கோரிவந்த தர்மலிங்கத்துடன் மற்றும் ஒருவர் வந்திருந்தார். அவரது பெயரை நான் பதியவில்லை.

- இவ்வாறு 12.01.1998 - 24.01.1998 வரையுள்ள ஆறுநாள்களிலும் தர்மலிங்கம், ரவீந்திரன், இராமச்சந்திரன் ஆகியோரின் பெயர்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தன. அங்கு கொண்டுவரப்பட்ட லொறியின் இலக்கத்தைத் தவிர அதன் நிறம் எது என என்னால் கூறுவதற்கு ஞாபகம் இல்லை.

12.01.1998 - 24.01.1998 வரையுள்ள காலப் பகுதியில் ஆறு தடவைகள் இந்த நிலையத்தில் தங்கியிருந்தனர். இங்கு வருவோர் தம்மோடு கொண்டுவந்த நகைகள், பணம் முதலியவற்றை பாதுகாப்பாக இட்டு வைக்க எம்மிடம் கையளிப்பதுண்டு. ரவீந்திரனும் தர்மலிங்கமும் இவ்வாறு 40 ஆயிரம் ரூபாவை பாதுகாப்பாக வைத்திருக்கும்படி என்னிடம் கையளித்திருந்தனர்.

தம்மோடு கொண்டுவந்த 43/1396 என்ற இலக்கமுடைய லொறியைத் திருத்துவதற்கே இந்தப் பணம் கொண்டுவந்ததாகக் கூறிய அவர்கள், மறுநாள் அத்தொகையை என்னிடமிருந்து மீளப்பெற்றுக்கொண்டனர். தர்மலிங்கம், ரவீந்திரன் ஆகிய இருவர் பெயரிலும் இந்த வாகனங்கள் பதியப்பட்டிருந்தன. இராமச்சந்திரன் என்பவர் அங்கிருந்து 17ஆம் திகதி வெளியேறினார். இவ்வாறு தங்கியிருந்தவர்கள் உள்ளே தங்கிவிட்டு வெளியே போவார்கள் பின்னர் உள்ளே வருவார்கள்.

20.01.1998இல் சிவராஜா என்பவரும் அவரது மனைவியான ஜெயராணி என்பவரும் இந்த நிலையத்தில் தங்கியிருந்தனர். நான்கு நாள்கள் அங்கிருந்தனர். இதற்கிடையில் தொலைபேசி அழைப்புக்கள் வந்தால் அதற்கான வசதியையும் ஏற்படுத்திக் கொடுப்பேன் - இவ்வாறு தங்கியிருந்தவர்கள் 24.01.1998ஆம் நாள் இரவே கலாசார நிலையத்திலிருந்து வெளியேறிவிட்டனர். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தர்மலிங்கத்தை நான் சந்தித்திருக்கின்றேன்.

25.01.1998இல் தலதா மாளிகை குண்டுத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் பற்றிக் கேள்வியுற்றேன்.

அதன்பின்னர் கலாசார நிலையத்தை நாம் மூடிவிட்டோம். மீண்டும் சுமார் ஆறு மாதங்களின் பின்னரே திறக்கப்பட்டது.

சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தியின் கேள்விகளுக்கு பதில் அளித்து சாட்சிமேலும் கூறுகையில், லொறியைத் திருத்துவதற்காக 40,000 ரூபாவை ரவீந்திரனே என்னிடம் கையளித்தார். இதனை தர்மலிங்கம் கண்டாரா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், ரவீந்திரனுடன் தர்மலிங்கமும் இந்த நிலையத்தில் இருந்தார். மறுநாள் காலை ரவீந்திரன் இப்பணத்தை என்னிடமிருந்து மீளப் பெற்றுக்கொண்டார்.

பழுதுபட்ட லொறியைத் திருத்துவதற்கு இருப்பதாகக் கூறியபொழுது கராஜ் பற்றிய விவரம் எனக்குத் தெரியாது என்றும் அது பற்றி மேலும் அறிய விரும்பினால் இந்த நிலையத்தில் பணிபுரியும் சேகரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்றும் ரவீந்திரனிடம் கூறினேன்.

- இவ்வாறு சாட்சி தெரிவித்தார்.

மேல் விசாரணை நேற்று 13ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

சாட்சி எதிரிக் கூண்டில் இருந்த 3 எதிரிகளையும் அடையாளங் காட்டினார்.

(ஐ)

# வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களில் சிரானின் மீள்குடியேற்றத் திட்டங்கள்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொள்ளும்

காரைதீவு,மே14

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் 'சிரான்' ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எட்டு மீள்குடியேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தம்பலகாமம் மீள்குடியேற்றத் திட்டமும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உப்புமாவெளி, வவுனியா மாவட்டத்தில் கல்மடு, மன்னார் மாவட்டத்தில் சொர்ணபுரி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆழியவளை ஆகிய மீள்குடியேற்றத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் மாங்காயூற்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் புல்லுமலை, அம்பாறை மாவட்டத்தில் தங்கவேலாயுதபுரம் ஆகிய மீள்குடியேற்றத்திட்டங்கள் நடைமுறைக்கு வரவுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு கிராமத்திலும் முன்பள்ளிப் பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், வீதி புனரமைப்பு, விளையாட்டு மைதானம், பொதுக்கிணறு, மலசலகூடம், சிறுவர் பூங்கா, பொதுமண்டபம் என்பன அமைக்கப்படவுள்ளன.

கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக மேற்படி கிராமங்களின் தமிழ் மக்கள் சொந்த இடமின்றி அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். 'சிரான்' திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக இந்த எட்டு மீள்குடியேற்றத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. அடுத்தடுத்த கட்டங்களில் ஏனைய கிராமங்களிலும் மீள் குடியமர்த்தப்படும் என்று கூறப்படுகின்றது. (ஐ)

# வாசகர் திருமுகம்

## யார்க்கெடுத்து உரைப்போம்?

இலங்கையின் ஏனைய பிரதேசங்களைப் போலன்றி வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் உலர் உணவு பெறுவது முதல் திருமணமாகாதோர் சான்றிதழ் பெறுவது வரை பல்வேறு தேவைகளுக்கும் பிரதேச செயலாளர்களை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச செயலர் பிரிவுகளின் நிர்வாகக் கடமைகளை மேற்கொள்ளும் பிரதேச செயலாளர்களினால் மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவுசெய்து புனர்வாழ்வு, புனரமைப்பில் அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்பது 'குருவி தலையில் பனங்காயைச் சுமத்தியது' போலத்தான்.

இந்நிலையில் நாடாளுமன்றம், திறைசேரி என்பவற்றின் அங்கீகாரத்துடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இலங்கை நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு 13-01-2003, 14-01-2003 ஆகிய தினங்களில் கொழும்பில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது. நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்கடிதங்கள் உரியநேரத்தில் கிடைக்காதபோதும் பல்வேறு தரப்பினரும் ஏற்றுக்கொண்ட பல்வேறு சிரமங்களின் மத்தியில் வடக்கு-கிழக்கு பரீட்சார்த்திகள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர்.

'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல்' அகில இலங்கை ரீதியான திறந்த போட்டிப் பரீட்சை மூலம் தெரிவுசெய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் கோரிக்கையின் பேரில் உயர் நீதிமன்றம் இந்நியமனத்திற்கான தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது மட்டுமல்ல, அவர்களை வடக்கு-கிழக்கின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் ஆலோசிப்பதாக அறியக் கிடக்கிறது.

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையால் அவர்களது புனர்வாழ்வு புனரமைப்பு, நடவடிக்கையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டிய நிர்வாக சேவை அதிகாரிகள் அந்தந்தப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களாகவும் அவர்களது மொழி, பண்பாடு, உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களாவும் இருக்கும் பட்சத்திலேயே உண்மையான புனர்வாழ்வும் புனரமைப்பும் சாத்தியமாகும் என்பது மறுப்பதற்கில்லை எனலாம்.

இந்நிலையை உணர்ந்து உரத்துச் சொல்வதற்கு அரசியல் தலைமைத்துவங்கள் தங்களைத் தயார்ப்படுத்திக் கொண்டால் மட்டுமே அரச கருமம் ஆற்றுவதற்கு மட்டுமல்ல அன்றாடத் தேவையை நிறைவு செய்யவும் இரண்டாம் மொழியைக் கற்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கும் அடிமட்ட மக்களின் பிரச்சினைக்கான தீர்வைக்காணவும் முடியும் எனலாம்.

- செல்வி பிரபா கந்தசாமி ஐயர்

## இந்து மாநாட்டுக் காலத்தில் இனி இறைச்சி, மதுபான கடைகளை மூடுக!

முதலாவது உலக இந்து மாநாட்டைப்போல் கொழும்பில் மாத்திரம் நடைபெறாது, நாடளாவிய ரீதியில் இரண்டாவது உலக இந்து மாநாடு நடைபெற்றது சிறப்பாக இருந்தது. இந்த மாநாடு நடைபெற்ற காலப் பகுதியில் நாட்டிலுள்ள இறைச்சிக் கடைகளும் மதுபானசாலைகளும் மூடப்பட்டிருந்தால், அர்த்தமுள்ள இந்துமதம் தொடர்பாக இடம்பெற்ற இந்த மாநாட்டுக் காலத்தில் பசுவதை, புலாலுண்ணல், மது வருந்துதல் போன்றவை தடுக்கப்பட்டு அர்த்தமுள்ள இந்துமத நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என அனைவரும் வியந்து பாராட்டும் நிலை ஏற்பட்டிருக்கும். அடுத்துவரும் உலக இந்து மாநாட்டு வேளைகளில் இறைச்சிக் கடைகளும் மதுபானசாலைகளும் மூடப்பட விழா அமைப்பாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். வெசாக் காலத்தில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதை அவதானிக்கிறோம். இந்த நடைமுறையை நாங்களும் பின்பற்றவேண்டும்.

திருநெல்வேலி. - ச.ஆ.கோபாலமூர்த்தி

# SPECIAL ENGLISH

☆ விசேட ஆங்கில மொழி கற்கைநெறி.
☆ பாடசாலை விலகியோர், O/L, A/L பரீட்சை முடித்தோர், உயர்கல்வி மாணவர், தொழிலில் ஈடுபட்டோருக்குரியது.
☆ ஆரம்ப நிலையிலிருந்து மொழியின் சகல பரப்புகளையும் கொண்ட பாடத்திட்டம்

**ஆரம்பம் : 17.05.2003**

☆ சனி,ஞாயிறு காலை, மாலை வகுப்புக்கள்

பிரிவு I காலை : 10-12 வரை
பிரிவு II பிற்பகல் : 2.30-4.30 வரை.

ஆசிரியர்: த.ந.பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு:

நிர்வாகி
**NEW SCIENCE HALL**
(17963) KANNATHIDDI, JAFFNA.



## உளமார வாழ்த்துகின்றோம்



எமது மதிப்புக்குரியவரான
**திரு.நாகலிங்கம் குமாரகுருநாதன்**
அவர்கள்
கிராம உத்தியோகத்தர் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்றுமையையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர் மேலும் பல பதவியுயர்வுகள் பெற்ற நீடுழி வாழ்க என்று பறாளாய் ஈசுர விநாயகரை வணங்கிப் பிரார்த்திக்கின்றோம். அத்துடன் எமது நிலையத்தில் இன்று (14.05.2003) புதன் கிழமை பாராட்டு விழா நடைபெறும்.

J/173 சுழிபுரம் வாழ் மக்கள்,
நாவலர் சனசமூக நிலையத்தினர்.
(c/27905)



## மாபெரும் மாட்டுவண்டில் சவாரி

புத்தூர் வடக்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் நடத்தும் பெருநிலப் பரப்பு காளைகள் பங்குபற்றும் சவாரிப் போட்டி

**இடம்: புத்தூர் சவாரித் திடல்**
**காலம்: 18.05.2003 ஞாயிறு பி.ப. 2.00மணி**

யாழ்., வன்னி காளைகளின் சாகசத்தைக் காணத்தவறாதீர்கள்.

(17962) -நடாத்துநர்.



உ
சிவமயம்

## 2ஆவது உலக இந்து மாநாட்டு

சிறப்பு நிகழ்வாக
**அச்சுவேலி ஆங்கிலக் கல்லூரி**
நடத்தும்
**இந்துசமய எழுச்சி விழாவும் பரிசளிப்பு விழாவும்**

இடம் : கல்லூரி மண்டபம்
காலம் : *15.05.2003 வியாழக்கிழமை காலை 8.30 மணி*
தலைவர் : திரு.பா.மனோகரன் (கல்லூரி முதல்வர்)

ஆசியுரை - சிவஸ்ரீ சிவலோகநாத கிருபாகரக்குருக்கள்
(தலைவர், சைவக் குருமார் பயிற்சிக் கல்லூரி செயற்குழு, திருநெல்வேலி)
பிரதம விருந்தினர் - திரு.தியாகராசா மகேஸ்வரன்
(அமைச்சர், இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு)
கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபையின்
**சைவ ஆகம அரும்பொருள் கண்காட்சி**
மே 15, 16 ஆகிய தினங்களில் ஆங்கிலக் கல்லூரியில் நடைபெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதி வீதி,
அச்சுவேலி. (17958)
இந்து தமிழ் கலாசார அமைப்பு
ஆங்கிலக் கல்லூரி.



## கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடமையாற்றிய
திருமதி
**திலகராஜா ஜெகத்ஜெனனி**
அவர்களது திடீர் மரணம் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி பெரும் மனவேதனையில் ஆழ்த்தியுள்ளது. அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை. (27723)
சமுர்த்தி முகாமையாளரும்,
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களும்.


கமெராவின் பணியை புறந்தள்ளி விட்டு

# நமது சினிமாவில் நிலைத்துவிட்ட அம்சங்கள் சினிமாவும் பாடல்களுமே!

## திரைப்பட கருத்தரங்கில் எழுத்தாளர் சட்டநாதன்

யாழ்ப்பாணம்,மே14

"சினிமாவின் அடிப்படை விஷயமான காட்சிப்படுத்தலை அதாவது கமெராவின் பணியைப் புறந்தள்ளி வசனங்களையும் பாடல்களையும் திரைக்கதையை நகர்த்தப் பயன்படுத்தும் உத்தி அன்று தொடக்கம் இன்று வரை நமது சினிமாவில் நிலைத்துவிட்ட ஓர் அம்சமாகி உள்ளது. இது சினிமா மொழியின் அவசியத்தைக் குறைத்து, சினிமாவை எப்பொழுதும் பொழுதுபோக்குத் தடத்தில் வைத்திருக்கவே உதவுகிறது."

யாழ்ப்பாணம் சிற்றி ஹோலில் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு ஒழுங்கு செய்த திரைப்படக் கருத்தரங்கில் பேசுகையில், எழுத்தாளர் சட்டநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எழுபதுகளின் பின்கூற்றிலும் எண்பதுகளின் ஆரம்பத்திலும் நல்ல திரைப்படங்கள் எனத் தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட திரைப்படங்கள் சில தமிழில் வரவே செய்தன. பாலு மகேந்திராவின் அழியாத கோலங்கள், ஜே.மகேந்திரனின் உதிரிப்பூக்கள், ஜி.துரையின் பசி ஆகிய குறிப்பிடத்தக்க கலை நேர்த்தியை அண்மித்த படங்களாகும்.

பிராமண சமூக ஆசாரங்களை மிகத் துணிச்சலாகக் கேள்விக்கு உட்படுத்தும் பரதனின் சாவித்திரி, அரசமைப்பின் ஆசாடபூதித் தனத்தையும் மக்களின் வாழ்நிலை அவலத்தையும் தத்ருபமாகச் சித்திரிக்கும் பாலச்சந்தரின் தண்ணீர் தண்ணீர், நாசரின் தேவதை, அவதாரம், பாபு நந்தன் கோடு அவர்களின் தாகம், இந்திரா பார்த்தசாரதியின் குறுநாவலான உச்சி வெய்யிலைத் தழுவி எடுக்கப்பட்ட சேதுமாதவனின் 'மறுபக்கம்' முதலிய தமிழில் வந்த இன்னும் சில நல்ல படங்கள் - என்றார்.

"எழுபதுகளில் தமிழ் நாட்டில் தொடங்கிய மாறுதல்களினால்-• தலைத்தூரம் மிக்க - வித்தியாசமான தமிழ்ப் படங்கள் வரத் தொடங்கின. இவற்றின் மீது மக்களின் கவனத்தைக் குவிப்பது நல்ல படங்களின் வளர்ச்சிக்கு உதவியாக அமையும்" என, கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய விமர்சகர் அ.யேசுராசா குறிப்பிட்டார்.

பயனுள்ள வகையில் பார்வையாளர் பங்குபற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது. (ஐ)

## முறைசாரா கல்வி பயிற்சி

யாழ்ப்பாணம்,மே14

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் பாடசாலையை விட்டு விலகிய மாணவிகளுக்கான முறைசாராக் கல்விப் பிரிவில் மனைமுகாமைத்துவம், கணனி ஆகிய பயிற்சியை மேற்கொள்ள விரும்புவோர் தமது விண்ணப்பங்களை கல்லூரி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். வகுப்புகள் எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாத்தறையில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

கொழும்பு,மே14

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தனது பொறுப்பின் கீழ் கொண்டு வந்ததை ஆட்சேபித்து நேற்று மாத்தறை நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர். அபிவிருத்தி லொத்தர் முகவர்களும் ஐக்கிய தேசிய முன்னணி ஆதரவாளர்களும் இப்பேரணியை ஒழுங்கு செய்தனர். (ஐ)

## படகுச் சேவை நாளை இல்லை

யாழ்ப்பாணம்,மே14

குமுதினி படகுப் படுகொலையின் 18ஆவது ஆண்டு நினைவு தினம் நாளை வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி குறிகாட்டுவானுக்கும் நெடுந்தீவுக்கும் இடையிலான பயணிகள் படகுச்சேவை இடம்பெற மாட்டாதென தீவக மக்கள் நலன் காப்பக நெடுந்தீவு கிளையின் தலைவர் எஸ்.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (ஐ-10)

## கசிப்பு, கோடா வைத்திருந்தோருக்கு அபராதம்!

கசிப்பு வைத்திருந்தமை, அதனைத் தயாரிக்கும் கோடா வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் நால்வருக்கு யாழ் நீதிமன்றினால் மொத்தம் 74 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குருநகர் தொடர்மாடியைச் சேர்ந்த கபிரியேல்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் -

அறுகாலமடத்தைச் சேர்ந்த ரவீந்திரன் உமாதேவி என்பவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் -

ஆனைக்கோட்டை, மூன்றாம் கட்டையைச் சேர்ந்த அப்புத்துரை பவளம் என்பவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 5ஆயிரம் ரூபா தர்மப் பணமும்-

யாழ்.கோயியாத்தோட்டத்தைச் சேர்ந்த நாகலிங்கம் இராசகுலேந்திரன் என்பவருக்கு 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் 5ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு நீதிவான் இ.த.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (ஐ-10)


## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

யாழ்ப்பாணத்தில் 13-05-2003 - 21-05-2003 வரை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

இளைஞர்களே!
சக்தி குறைவு - ஞாபக மறதி - பயம் - நடுக்கம் - நித்திரைக் குறைவு
இவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலை வேண்டாம்.
உடனே என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள்!
ஆண்மைச் சக்தி குறைவுதான் உங்கள் கவலையா?
மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.
தொடர்பு கொள்ளவும்:

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N.சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
**Govt. Regd. No. 9492**
**HOT LINE - 0777 - 569205**
**T.P.: 3181, 5399**
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-27909)



தென் இந்திய வயலின் வித்துவான்
**சங்கீதபூஷணம் இராமநாதன் கலைஅரசன்** அவர்களின்
(மிருதங்க வித்துவான் சங்கீதபூஷணம் A.S.இராமநாதனின் புதல்வன்)

## வயலின் இசைக் கச்சேரி

இடம்: இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
காலம்: இன்று (14-05-2003) புதன்கிழமை
நேரம்: மாலை 6மணி

வயலின் இசைக் கச்சேரி
வயலின் - சங்கீதபூஷணம் இராமநாதன் கலைஅரசன்,
மிருதங்கம் - கலாவித்தகர் சுப்பிரமணியம் கமலதாஸ்
கடம் - கலாவித்தகர் திருச்செசுநாதன் வரோதயன்
முகர்சிங் - வித்துவான் கந்தசாமி நந்தகுமார்
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

(17961) - யாழ்ப்பாண இசைக்கலைஞர்களும் இளங்கலைஞர் மன்றமும்.



## துயர் பகிர்கின்றோம்

யாழ்.வணிகர்கழக நிர்வாக சபை உறுப்பினரும் போஸ்கோ நிறுவன உரிமையாளருமாகிய திரு.ம.சி.சந்திரபோஸ் அவர்களின் அருமைத் தாயார்
**திருமதி மயில்வாகனம் நாகபூரணம்**
அவர்களின் மறைவினால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (C-27908) - யாழ்.வணிகர் கழகம்



## அறிவித்தல்

புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை

**கிராமிய வங்கி மீதிகளை உறுதிப்படுத்தல்**

28-02-2003 இல் முடிவடைந்த நிதியாண்டுக்குரிய கணக்காய்வு இடம்பெறுவதால் மேற்குறித்த காலத்திற்குரிய தங்கள் கணக்கு மீதிகளை 10-06-2003 இற்கு முன்னர் உறுதிப்படுத்துமாறு வாடிக்கையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். உறுதிப்படுத்தப்படாத பட்சத்தில் சங்க மீதிகள் சரியெனக் கொள்ளப்படும்.

- பொது முகாமையாளர்.

புலோலி ப.நோ.கூ.சங்கம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.
தொலைபேசி இல. 2263275 (சி-27907)

# யாழ்ப்பாணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து முகக் கவசங்களைப் பெற்றுக்கொள்வதற்கான முடிவு அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதேவேளை -

குடாநாட்டில் 'சார்ஸ்' நோய் அறி குறிகளுடன் நோயாளி ஒருவர் இனங் காணப்பட்டிருக்கின்றபோதிலும் 'சார்ஸ்' நோய் தடுப்பு வசதி வாய்ப்புகள் எதுவும் இல்லாத நிலை காணப்படுவது பற்றி மருத்துவ வட்டாரங்களில் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

'சார்ஸ்' நோயிலிருந்து ஓரளவு பாதுகாப்பு பெறுவதற்கான உடனடித தடுப்பு நடவடிக்கையாக முகக் கவசம அணிவது (மாஸ்) சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

சுவாசத்துக்காக உள்ளெடுக்கும் காற்றை சுத்திகரிக்கும் இந்த தடுப்பு முறையை பின்பற்றுவதன் மூலம் நோய் தொற்றுவதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் என உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது. எனினும், இந்த முகக் கவசம் போதியளவில் இன்னமும் யாழ்.மருத்துவமனைக்கு கிடைக்கவில்லை எனத் தெரியவருகிறது.

ஒரு தொகை முகக் கவசங்களை கொழும்பில் தயாரித்து பெற்றுக் கொளவதற்கான முயற்சியில் ஆஸ்பத்திரி நிர்வாகம் அவசரமாக இறங்கியுள்ளது.

என்றாலும், மருத்துவர்கள் மற்றும் நோயாளிகளின் பாவனைக்குரிய அளவிலேயே அவை கிடைக்கும் என்று கூறப்படுகிறது. ஆஸ்பத்திரிக்கு வெளியே பொதுமக்கள் தங்களைப் பாதுகாப்பதற்காக முகக் கவசங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு அறவே இல்லாதிருப்பதால் மாற்று வழிகள் மூலம் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றனர்.

நன்கு சுத்திகரிக்கப்பட்ட சேலைத துணிகள் (கைலேஞ்சி) மூலம் முகத்தையும் வாயையும் மூடிக்கட்டியிருத்தல், பொதுமக்கள் கூடும் இடங்களில் தேவையின்றி நடமாடுவதைத் தவிர்த்தல், சாதாரண சுவாச நோய்கள் ஏற்பட்டால் உடன் மருத்துவ சிகிச்சையை நாடுதல் போன்ற முன்னெச்சரிக்கை தடுப்பு முறைகளை பொதுமக்கள் தாங்களாகவே பின்பற்றலாம் என்று மருத்துவர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

(ஜ-9-15)

# ஜனாதிபதியின் எந்தவித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திபதி, பிரதமரின் ஆலோசனையைப் பெறவேண்டும் என்பது அத்தியாவசியமாகின்றது.

இவ்விடயத்தில் ஜனாதிபதி தவறு செய்துள்ளார்.

ஜனாதிபதியின் கட்சியை மக்கள் நிராகரித்து விட்டபின் நாம் மக்களின பெரும்பான்மையுடன் நாடாளுமன்ற அதிகாரத்தைப் பெற்றோம்.

அதன் பின்னரும் இவ்விடயத்தில் தனக்கே அதிகாரம் இருப்பதாக ஜனாதிபதி கருதுவாரானால் அதன்படி தன்னிச்சைப்படியே அப்போது பிரதமரையும், அமைச்சரவையையும் அவர் நியமித்திருக்கலாமே?

ஆனால், அரசமைப்பில் அதற்கு இடமில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட கட்சித் தலைவரின் சிபார்சுகளின்படியே அமைச்சரவை நியமிக்கப்படவேண்டும் இதுதான் நியதி.

இப்பொழுதும் கூட இவ்விடயத்தை நாம் ஜனாதிபதியுடன் பேசித் தீர்க்கத தயார். அதனைப் பிரதமர் தெளிவாக அறிவித்துள்ளார். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூட இதனை வலியுறுத்தி கருத்துத் தெரிவித்துள்ளார். இன்றும் கூட ஜனாதிபதியின் பதிலை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்பொழுது நிலைமையை நாடி பிடித்துப் பார்ப்பது போல் அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலில் கை வைத்துள்ளார். இது சாத்தியமானால் தொடர்ந்து - படிப்படியாக - தகவல் திணைக்களம், நிதி அமைச்சு, வெளி விவகார அமைச்சு என ஒவ்வொன்றிலும் அவர் கைவைக்க முயற்சிப்பார். ஆனால், அதற்கும் நாம் இடம் கொடுக்கத் தயாராக இல்லை.

முன்பும் கூட நாம் புதிதாக ஏழு அமைச்சர்களை நியமித்த போதும் ஜனாதிபதி கெடுபிடி ஏற்படுத்தி அவர்கள் பதவியேற்பதைத் தாமதப்படுத்தினார். என்றாலும் அப்பிரச்சினையையும் பேசித்தீர்த்தோம். எனவே, பேச்சு மூலம் எதையும் சாதிக்கலாம் என்று நம்புகின்றோம்.

இதை ஜனாதிபதி புரிந்துகொள்ளத் தவறினால் அவருடைய சவால்களை ஏற்க நாம் தயார்.

- என்றார் அமைச்சர் பீரிஸ்.

# யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திரும்பியிருந்தனர் என்று யுவதியின் உறவினர் தெரிவித்துள்ளனர்.

'சார்ஸ்' நோய் தொற்று ஏற்பட்டிருக்கும் கனடாவின் ரொறன்ரோ நகரில் இருந்து அவர்கள் வந்ததாகக் கூறப்படுகின்றது.

தீவிர சுவாசத் தொற்றினால் மூச்சுவிட முடியாத நிலையில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நோயாளியை எப்படிப் பராமரிப்பது என்பதில யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் தடுமாறிப போயிருப்பதாகத் தெரியவருகிறது.

இத்தகைய ஆபத்தான தொற்று நோயாளி ஒருவரை வைத்துப் பேணிப பராமரிக்கக்கூடிய ஆகக் குறைந்தபட்ச வசதிகள் கூட யாழ். ஆஸ்பத்திரியில் இல்லை. இதனால் ஆஸ்பத்திரி டாக்டர்கள், பணியாளர்கள் மத்தியில் பீதியான ஒரு நிலைமை ஏற்பட்டிருந்ததை நேற்று அவதானிக்க முடிந்தது.

# மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருந்து சுமார் ஒன்றரை மாத காலமாக அவர் சாதாரணமாக நடமாடியுள்ளார்.

உண்மையில் 'சார்ஸ்' நோய்த் தொற்று ஏற்படின் சுமார் 10 நாள்களுக்குள் அதன் அறிகுறிகள் வெளித் தெரியும். ஆனால், இதுவரை பெறப்பட்ட மருத்துவ அறிக்கையின் பிரகாரம், குறிப்பிட்ட நபருக்கு 'சார்ஸ்' தொற்று இருப்பதனை உறுதி செய்யமுடியவில்லை. எவ்வாறாயினும், தேவையான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும். பிரஸ்தாப நபரின் நோயினை இனங்கண்டு உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

- இவ்வாறு டாக்டர் சதுர்முகன் கூறினார். (ம-9)


## விற்பனையாளர் உடன் தேவை

இணுப்பையடிச் சந்தி, பலாலி வீதியில் புதிதாக திறக்கப்படவுள்ள மருந்தகத்திற்கு (பார்மசி) அனுபவமுள்ள பெண்பிள்ளை உடன் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

இன்றும், நாளை வியாழக்கிழமையும் காலை 9.00 - பி.ப. 3.00 மணிவரை நேரில் சமுகம்தரவும்.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

இல.71, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
( ஆரணி மில் அருகில் )



## உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
## நூலக ஆண்டு

150 ஆண்டுகள் புனிதக் கல்விப் பணியாற்றி 151ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் எங்கள் கல்லூரி இந்த ஆண்டை நூலக ஆண்டாகப் பிரகடனம் செய்திருக்கின்றது.

போரின் அனர்த்தங்களால் முற்றாக அழிந்துவிட்ட கல்லூரி நூலகம் மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த நூலகத்திற்கு புதிய நூல்களையும் நிதிஉதவிகளையும் தாராளமாக வழங்கி உதவுமாறு பழைய மாணவ சகோதர, சகோதரிகளையும் நலன்விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம். விவரங்களுக்கு எம்முடன் அல்லது கல்லூரி அதிபர் திரு.கி.நடராசா (தொ.பே.021 - 226 3531) அவர்களைத் தொடர்புகொள்ளலாம். நூலாசிரியர்களும் வெளியீட்டு நிறுவனங்களும் இந்த நல்ல கைங்கரியத்திற்கு உதவ முன்வருமாறு வேண்டுகிறோம்.

**பேராசிரியர் அ.நவரத்தினராசா,**
(தலைவர், பழைய மாணவர் சங்கம்),
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம். (17972)

**திரு.க.யோகசாமி**
**(செயலாளர்)**
**பழைய மாணவர் சங்கம்.**



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை
## கணனிப்பயிற்சி நிலையம்
*கணனிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் கோரல்*

Diploma in Ms-Office
(Word, Excel, Access & Power Point)

புதிய பிரிவுகள் ஆரம்பம்: 27.05.2003

※ Batch 1 - சனி, ஞாயிறு ※ Batch 2 - செவ்வாய், வியாழன்
※ பதிவுக் கட்டணம் 100 ரூபா ※ பயிற்சிக் கட்டணம் 2400 ரூபா

கூட்டுறவாளர் வீரசிங்க கட்டடத்தொகுதி
இல-12, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
Tel 021-222-2324 (C/27910)

மாவட்டச் செயலாளர்,
யா.மா.கூ.சபை


## துயர் பகிர்கின்றோம்



**வைத்திய கலாநிதி**
**செல்வி பரமேஸ்வரி சின்னப்பா**
அவர்களின் ஆத்மா பெறுக சாந்தி!

நெஞ்செல்லாம் பதறுதம்மா நின் பிரிவைக் கேட்டு
நீணிலத்தில் அன்புருவம் நின்னைப் போல் உண்டோ?
மிஞ்சிவரும் நோய் தீர்க்கும் வைத்திய கலாநிதியே!
மேதினியில் செல்வி பரமேஸ்வரி சின்னப்பா நீயே
தஞ்சமெனும் நோயாளர் பிணியாவும் தீர்ப்பாய்!
தகுந்தவிரி வுரைகள்பல தருவாயே அம்மா!
பிஞ்சுமதி சூடும்சிவ பதந்தனிலே சேர்ந்தாய்
பரமேஸ் வரியம்மா பெறுகவே சாந்தி!

*சச்சி மோட்டோர்ஸ்,*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி வடக்கு,*
*யாழ்ப்பாணம்.* (17974)

- பிரிவால் வாடும்
ஊழியர்கள்.


எமது புதிய வீடியோ CD வெளியீடு
**புதிய கீதை**
நிதர்ஷன் வீடியோ
மயிலங்காடு
CD, பிரதிகளை உடன்
சந்திரன் மினி, யாழ்ப்பாணம்
புனா றெக்கோடிங் சென்ரர்
நெல்லியடியிலும்
பெற்றுக்கொள்ளலாம்.

எமது புதிய
வீடியோ CD வெளியீடு
**புதியகீதை**
உடன் பெறலாம்
ரம்பாஸ் வீடியோ
102, கண்டி வீதி, அரியாலை.
(வைரவர் கோயில் அருகில்)
T.P: 0777-115567

புதிய வீடியோ CD வெளியீடு
**புதியகீதை**
**அன்பே அன்பே**
CDயும் பிரதியும் உடன்பெறலாம்.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
வடமராட்சியில்:
சோலை வீடியோ
பிரதான வீதி, நெல்லியடி. (சி-27906)


நாகம்ஸ் சுன்னாகம்

சரத்குமார்,
சிம்ரன், கிரண், ரோஜா
நடித்த
**அரசு** (புதிய)
தினசரி காட்சிகள் : 1.00, 4.00, 7.00 (பு.நே.) (17833)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
குதூகல ஆரம்பம்
இளையதளபதி விஜய்,
மீராஜஸ்மின்

**புதிய கீதை**
10.30, 1.30, 4.30, 9.30

நிஷாந்சனாஸ்
**அவள் வருவாளா?**
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
(வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
CANNIBAL

லிபேட்டி அச்சுவேலி

விஜய், ஸ்நேகா நடித்த
**வசீகரா** (புதிய)
காட்சி நேரம் :
1.00, 4.00, 7.00(புதிய நேரம்)
பிவள் விழுதுகள் விஜயாந்த் நடிக்க ரமணா

லக்சுமி சினிமா
(இணுவில்)
மாதவன், ஸ்நேகா,
வையாபுரி மணிவண்ணன் சார்லி
மற்றும் பலர் நடிப்பில்
**என்னவளே**
தினசரி 11.00, 3.00, 7.00 (பு.நே.) (17930)



**தேவை**

பான்சிக் கடையில் வேலை யாற்றக்கூடிய பெண் ஊழியர்கள் தேவை.
(மாநகர சபைக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது)
ராஜா குறோசரிஸ்,
153,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (17971)

நியூ றோயல் அக்கடமி
சங்கத்தானை
SPOKEN ENGLISH WITH GRAMMAR
புதிய பிரிவு
By:
K.நிஷாந்தன்
ஆரம்பம்: 16.05.2003
வெள்ளி - 3.30 p.m.
A/L 2005 வரலாறு
By: சுஜீகரன்
கணிப்பட்ட அனுமதி வழங்கப்படும்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
விஜய் இன்
**புதிய கீதை**
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

BITSMANS
பிரிவு 2
கல்வி நிலையம்
மானிப்பாய்
O/L Day Class
(எமது வழமையான
Super Grade ஆசிரியகுழு )
ஆரம்பம்: 15.05.2003 வியாழன் 8.00
(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவுசெய்யவும்)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
LECTURES BY
MR.M.A.HARI
முதலாவது புதிய பிரிவு ஆரம்பம்:
28.05.2003 புதன் மாலை 4 மணி
WED. MON. } 4p.m. - 5p.m.
அனுமதிக்கு முந்துங்கள்.
HARY'S INSTITUTE
இல.564, கஸ்தூரியார் வீதி,
(யாழ் இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.


## கண்ணீரக் காணிக்கையாக்குகின்றோம்



போஸ்கோ காகிதாதி நிறுவன உரிமையாளர்
**திரு.ம.சி.சந்திரபோஸ்** அவர்களின் தாயார்
**திருமதி மயில்வாகனம் நாகபூரணம்**
அவர்களின் மறைவினால் ஆறாத் துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அபிராமி அச்சகம்,*
*சம்பியன் லேன்,*
*கொக்குவில்.* (C/27923)

செ.ஜெயகாந்தன்,
செ.விஷ்ணுகாந்தன்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா செல்லத்துரை

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லத்துரை அவர்கள் 11.05.2003 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

12.05.2003 பத்திரிகையில் வெளியான மரண அறிவித்தலின்படி அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2003) புதன்கிழமை பிப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*181,அரச வீதி,*
*நல்லூர்,யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி சுந்தரலிங்கம் மாரிமுத்து

(நல்லாச்சி, சுழிபுரம் மேற்கு)

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த திருமதி சுந்தரலிங்கம் மாரிமுத்து அவர்கள் 12.05.2003 செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சி.கோகில இசைவாணி, திருமதி சுஜீந்திரசிதம்பாணி, திருமதி இ.அருட்கலைவாணி, திருமதி தி.விக்னேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வே.சிவசுப்பிரமணியம், பொ.கனகலிங்கம், இ.இராசையா ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறுவிசங்கர், திருமதி இ.அனித்தா, திருமதி த.மைதிலி, துபாந்தி, காலஞ்சென்ற சிவசங்கர்(கண்ணன்), இதர்ஷன், திருமதி ச.வினோதினி, சதுநந்தநாதன், அசோக்கிருஷ்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ச.மிதுஷா, இ.கண்ணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.05.2003) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக திருவடி நிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*சுழிபுரம்.*

*தகவல்,*
குடும்பத்தினர்.

# 'புளொட்' உறுப்பினர்கள் மீது கிரனேட் வீச்சு; 8பேர் காயம்!

## மட்டக்களப்பு வைத்தியசாலை வீதியில் சம்பவம்

மட்டக்களப்பு,மே14

மட்டக்களப்பு, வைத்தியசாலை வீதியிலுள்ள புளொட் இயக்க அலுவலக முன்றிலில் கரப்பந்து விளையாடிக் கொண்டிருந்த புளொட் அங்கத்தவர்கள் மீது நேற்று மாலை 6.25 மணியளவில் - இனந்தெரியாத நபர்களினால் - கிரனேட் வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

இதில் மட்டு. மாநகர முன்னாள் பிரதி மேயர் சூட்டி (மயில்வாகனம் நிஸ்கந்தராஜா) உட்பட 8 பேர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொன்னம்பலம் இராஜதுரை (மட்டக்களப்பு), தங்கையா முருகமூர்த்தி (சேத்துக்குடா), செல்லத்துரை தங்கராஜா (தம்பலவத்தை), இராமசாமி அந்தோனிப்பிள்ளை (மட்டக்களப்பு), யோகேந்திரன் சிவச்சந்திரன் (புதூர்), கந்தையா கணேசலிங்கம் (முறக்கொட்டாஞ்சேனை), தம்பிராஜா பாலேந்திரன் (புதூர்) ஆகியோரே காயமடைந்த ஏனையோர்களாவர்.

கிரனேட் வீச்சை மேற்கொண்ட இருவரும் மட்டு. வைத்தியசாலை வீதியினூடாக சிறைச்சாலைப் பக்கத்தை நோக்கி தப்பிச் சென்றனர் எனப் பொது மக்கள் தெரிவித்தனர்.

## வடக்கு - கிழக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு அரசுத் தரப்பில் இருந்து இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போது காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் உடனடி மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான உபகுழு (சிரான்) உருவாக்கப்பட்டது.

ஆனால், போதிய நிதி, நிர்வாக அதிகாரம் வழங்கப்படாததால் அதன மூலம் எந்தத் திட்டத்தையும் செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதைப் புலிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு - கிழக்கு புனர்வாழ்வு நிதியம் போதிய சட்டவலுவற்ற அமைப்பு என அரசுத் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையில் புதிய கட்டமைப்பு ஒன்று குறித்துப் புலிகள் யோசனை முன்வைத்துள்ளனர்.

நிர்வாக ரீதியாகப் போதிய அதிகாரங்களுடன் கூடிய பலமான அமைப்பாக இக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். நிதியைக் கையாளும் அதிகாரம் இக்கட்டமைப்புக்கு சட்ட ரீதியாக வழங்கப்படவேண்டும் என்றும் புலிகளின் யோசனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

இந்தக் கட்டமைப்பு உருவாக்கபட்டு சட்டரீதியான வலு அக்கட்டமைப்புக்கு வழங்கப்படும் பட்சத்தில், டோக்கியோவில் நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்ற முடிவை விடுதலைப் புலிகள் மறுபரிசீலனை செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் இந்த யோசனை குறித்து வெளிநாட்டு ராஜதந்திரிகளுடனும், அரச மட்டத் தலைவர்களுடனும் தமிழ்க் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கலந்துரையாடவுள்ளனர் எனவும் தெரியவந்தது.

## அபிவிருத்தி...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

அச்சிடவேண்டாம் என ஊடகத்துறை அமைச்சரும் கடிதம் எழுதி உள்ளனர். இதனால், ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்கவே அரச அச்சகர் இவ்விடயத்தை சட்டமா அதிபரின் தீர்ப்புக்கு சமர்ப்பித்துள்ளார். இன்னும் சட்டமா அதிபரின் பதில் அவருக்குக் கிடைக்கவில்லை.

வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுவது பிரச்சினை இல்லை. ஆனால், ஜனாதிபதியின் அணுகுமுறை தவறானது; ஏற்றுக்கொள்ளமுடியாதது - என்றார் அமைச்சர் பீரிஸ்.

# யுத்தம் வெடிக்காது என சமிக்ஞை காட்டிவிட்டே பாலா புறப்பட்டார்!

## விமானம் ஏறமுன்னர் அவரைச் சந்தித்த ஜீ.எல். பீரிஸ் தகவல்

கொழும்பு,மே.14

"நாட்டில் மீண்டும் யுத்தம் வெடிக்காது. அதற்கான - திட்டவட்டமான - சமிக்ஞையைக் காட்டிவிட்டே திங்கள் காலையில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் லண்டன் புறப்பட்டார்".

- அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இவ்வாறு நேற்று தகவல் வெளியிட்டார்.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஞாயிறு பிற்பகல் ஹெலி மூலம் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டார். திங்கள் காலை கொழும்பிலிருந்து விமானத்தில் அவர் லண்டன் பயணமானார்.

லண்டன் புறப்பட முன்னர் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அருகே ஏர்போட் கார்டன் ஹோட்டலில் அவர் தங்கியிருந்த சமயம் தாம் அவரைச் சந்தித்து சுமார் அரை மணி நேரம் உரையாடியதாக பேராசிரியர் பீரிஸ் கூறினார்.

பேராசிரியர் பீரிஸ் மேலும் கூறியதாவது:- மதியுரைஞர் பாலசிங்கம் உடல் சுகவீனம் காரணமாகவே திடீரென புறப்பட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. அதற்கு வேறு காரணங்கள் கிடையா.

அவருடன் சுமார் அரை மணி நேரம் உரையாடினேன். நாங்கள் அரசியல் விவகாரங்கள் குறித்துப் பேசவில்லை. எனினும், இங்கு மீண்டும் யுத்தம் வெடிக்காது என்று சமிக்ஞை காட்டிவிட்டே அவர் புறப்பட்டுச் சென்றார். எனவே, ஜப்பானில் நடைபெறும் உதவும் நாடுகளின் கூட்டத்தில் புலிகள் பங்குபற்றுவார்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

பாலசிங்கத்துக்கு ஏற்பட்டுள்ள சுகவீனம் பாரதூரமானதல்ல. சாதாரணமானதுதான். எனினும், தமது உடல் நிலைமையை கருத்தில் கொண்டு வெளிநாட்டில் தமக்கு வழக்கமாக சிகிச்சையளிக்கும் வைத்தியர்களின் கவனிப்புக்கு தாம் உட்படுவதை அவர் விரும்பினார். அதனால் அவர் புறப்பட்டுச் சென்றார். அவர் விரைவில் நாடு திரும்புவார்.

அவர் விரைவாகச் சுகமாக பிரதமரும், நாங்களும் பிரார்த்திக்கிறோம். என்றார் அமைச்சர் பீரிஸ். (ம)

## சிறந்த கல்விமான் காலமானார்

யாழ்ப்பாணம்,மே14

சிறந்த கல்விமானும் புகழ்பூத்த விளையாட்டு வீரருமான இ.கனகலிங்கம (வயது78) நேற்றுக் கொழும்பில் காலமானார்.

யாழ்.இந்துக்கல்லூரியின் பழைய மாணவனான இவர், கனகரத்தினம் ம.வி, உரும்பிராய். இந்து, பரமேஸ்வராக் கல்லூரிகளின் அதிபராகவும் பலாலி ஆசிரிய கலாசாலை அதிபராகவும் பணியாற்றினார்.

பல்வேறு விளையாட்டு அமைப்புக்களில் முக்கிய பதவிகளை வகித்த இவர் சிறந்த கோல் காப்பு வீரராவர். (ம-3)

## தாய்லாந்தில் மூன்று தமிழர்கள் கைது!

தாய்லாந்து பொலீஸார் மூன்று இலங்கைத் தமிழர்களைக் கைது செய்தனர். அவர்களிடமிருந்து 13 கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. அவற்றை அவர்கள் இலங்கைக்கு கடத்த திட்டமிட்டிருந்தனர் என்று தாய்லாந்து அதிகாரி ஒருவர் கூறினார்.

ஏ.சத்தியபவன் (வயது 34), ரி.சசிதரன் (வயது 29), குணபால சுப்பையா (வயது 27) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் என்று பொலீஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

சட்டவிரோத ஆயுதங்களை வைதிருந்தனர் என்று இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்று பொலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.


உடன் விற்பனைக்கு

இரண்டு 12" கிறைண்டர், 10Hp எஞ்சின், சோமசிறி, No.7 அல்லர், ஈர அரிசி அரைக்கும் மெசின் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு:
இந்திரன் மில்
உடுவில் வீதி, மானிப்பாய். (17891)

ஈசன் கல்வி நிலையம்
A/L 2004 கணக்கீடு
ஒற்றைப்பதிவு
திரு.பாலவாசன் B.B.A.(F.M.Spl.)
ஆரம்பம்: 14-05-2003 (WED.) 3.00P.M. (17926)

தரை ஓடுகள் (Terra Cota Tiles). கூரை ஓடுகள், முகட்டோடுகள் என்பன விற்பனைக்கு உண்டு. (17906)


நியூ தாரங்கி
109, பலாலி றோட்,
திருநெல்வேலி.
T.P. No.021 222 2132


# 14ஆம் ஆண்டு நினைவலைகள்

## அமரர் நாகலிங்கம் அப்பையா

(மண்கும்பான்)

*திதி: இன்று (14-05-2003) புதன்கிழமை*



அன்னை மடியில் 05.08.1934
ஆண்டவன் அடியில் 01.05.1989

அன்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
திகழ்ந்த நீங்கள் இம்மண்ணுலகை விட்டுச் சென்று
வருடங்கள் பதினான்கு சென்றாலும்
ஐயா! உங்கள் நினைவு
என்றும் எங்கள் உள்ளத்தில் நிலைத்து நிற்கும்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

*நியூ நகுவா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.* (சி-27895)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.